பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 18 வெள்ளிக்கிழமை 03.08.2018 | கதிர் 270

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப்பொறுத்தவரை இன்று ஒரு முக்கிய கண்டமான நாள் என்று நினைக்கிறேன்.

அக்கட்சியின் யாழ். மாநகர முதன்மை வேட்பாளராகப்போட்டியிட்டவரும் தற்போது யாழ். மாநகரசபைஉறுப்பினருமானவி.மணிவண்ணனுக்கு பக்கம் 03

# 2020 ஆம் ஆண்டுக்குள் தமிழ் மக்களுக்குத் தீர்வு

## யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று உறுதிபட தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 03

நாட்டில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப் பிரச்சினைக்கு எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் நிரந்தரத் தீர்வு எட்டப்படும்.

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதிபடத் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க. பக்கம் 14

## தீர்வை எட்ட சந்திரிகா ஒத்துழைக்கவேண்டும்

### மாவை நேரில் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக.03

இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முழு ஒத்துழைப்பையும் பக்கம் 14

## அரச சலுகைக் கடன் திட்டம் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்



யாழ்ப்பாணம், ஓக.03

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் அரச வட்டிச் சலுகைக் பக்கம் 14

## சுயாட்சி தந்து எம்மை நாமே ஆள விடுங்கள்!

### சந்திரிகாவிடம் கோரினார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஓக.03

சுயாட்சி தந்து எம்மை நாமே ஆள விடுங்கள் என்று அரசியலில்நாம்கோருகின்றோம்.நீங்கள் மத்தியில் இருந்து தாய்க் கோழி குஞ்சுகள் வளர்வதைப் பக்குவமாய்ப் பார்த்து வருவது போல் எங்களைப் பார்த்து வாருங்கள் என்றே எமது அரசியல் கருத்துக் களை பக்கம் 03

## இந்த ஆட்சியில் தீர்வின்றேல் தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பர்

### சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

இனப் பிரச்சினைக்கான தீர்வு இந்த ஆட்சியில் கிடைக்காவிட்டால் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலிகளில் தமிழ் மக்கள் யாருக்கும் பக்கம் 14

## அமைச்சர்கள், எம்.பிக்களின் சம்பளம் இரண்டு மடங்காகியது

கொழும்பு, ஓக.03

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளம் 215 சத பக்கம் 14

**ரவிராஜ் படுகொலை சம்பவம்:**

## விடுதலைத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, ஓக்.03

ரவிராஜ் படுகொலை வழக்கில் எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்து ஜூரி அவையைக் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து பக்கம் 03

## மீண்டும் வடக்கு வருகிறார் ரணில்

கொழும்பு, ஓக.03

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சனிக்கிழமை மீண்டும் வடக்குக்குப் பயணம் செய்யவுள்ளார். இதன்போது யாழ். பல்கலைகழகத்தின் பக்கம் 14

## யாழ். வந்தார் உபதிஸ்ஸ தேரர்

யாழ்ப்பாணம், ஓக.03

மதவேற்றுமைகளைக் களைந்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்கும் நோக்குடன் நேற்று யாழ். மாவட்டத்துக்கு வருகை பக்கம் 14

## யாழில் 11 பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக 03

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இதுவரை 11 பேரைத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் என வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பக்கம் 14

## முல்லைத்தீவு மீன்பிடித் திணைக்களத்தை ஆத்திரமுற்று அடித்துடைத்தனர் மீனவர்கள்

### ஆர்ப்பாட்டத்தை அடுத்து கொதித்தெழுந்தமையால் பரபரப்பு





முல்லைத்தீவு, ஓக 03

பொலிஸாரின் தடைகளையும் மீறி நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடி, நீரியல் வளத் திணைக்களத்துக்குள்புகுந்த மீனவர்கள் அங்குதிணைக்கள ஜன்னல் பக்கம் 14

## கூரை ஏறி கோழி பிடிக்கமுடியாத தவராசா வானம் ஏறி வைகுண்டத்தில் காலம் கழிக்கிறார்

### அவைத் தலைவர் ஆசியால் இது சாத்தியமானது என முதல்வர் விக்கி கிண்டல்



யாழ்ப்பாணம், ஓக.03

“மாகாணசபையை நடத்த வலுவற்ற முதல்வர் வடக்கில் வன்முறையை எப்படி அடக்குவார்? கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர் வானம் ஏறி வைகுண்டம் போவது எப்படி?” – என நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா எழுப்பிய கேள்விக்கு அதே பாணியில் பதில் தந்திருக்கின்றார் பக்கம் 03



## முல்லை மீனவர் விவகாரம்; ஆராய 8 ஆம் திகதி கூட்டம்

முல்லைத்தீவு, ஓக 03

முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று பக்கம் 14

## முல்லையில் சுருக்குவலை தற்காலிகமாக உடன் தடை

முல்லைத்தீவு, ஓக.03

முல்லைத்தீவு மீனவர்களிடையே காணப்படும் சுருக்குவலை மீன்பிடி முறையைத் பக்கம் 14

# இலங்கையுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா உறுதி



கொழும்பு, ஓக 03

ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைக்கு எதிராக, இலங்கை அரசு, சிவில் சமூகம் மற்றும் அனைத்துலக அமைப்புகளுடன் இணைந்து பணியாற்ற, அர்ப்பணிப்புடன் தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆட்களைக் கடத்துதலுக்கு எதிரான உலக நாளை முன்னிட்டு, அனைத்துலகத் தொழிலாளர் அமைப்பு கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரை யாற்றிய அமெரிக்கப் பதில் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், சுமார் 2.5 மில்லியன் டொலர் வரையான மூன்று கொடைகளுக்கு நிதி அளித்துள்ளது.

இந்தக் கொடைகளை, ஆட்களைக் கடத்துபவர்களுக்கு எதிரான நீதித்துறை விசாரணை, மற்றும் அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்துவதற்கு உதவும் செயற்பாடுகளுக்கும், ஆட்கடத்தல் தொடர்பான காத்திரமான தரவுகளைச் சேகரித்து, அறிக்கையிடுவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் மற்றும் பாதுகாப்புக்கும் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மன்னாரில் திறப்பு



மன்னார், ஓக 03

மன்னார், உயிலங்குளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகம் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வட.மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசனுடன் இணைந்து மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.ஏ.மோகன்றாஸ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் ஆகியோர் வைபவ ரீதியாக அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், நானாட்டான் பிரதேச சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காரில் கஞ்சா கடத்தல் மன்னாரில் முறியடிப்பு

மன்னார், ஓக 03

கடற்படையினரால் விடே அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மன்னாரில் கார் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட 130 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை விடே அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்தோடு தொடர்புடைய ஒருவரையும் அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி 65 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# நாட்டை ராணுவமயமாக்க முனைகின்றது கூட்டு அரசு

கொழும்பு, ஓக 03

அரசு நாட்டை இராணுவ மயப்படுத்த முனைவதாகவும், இது ஆபத்தான நிலை என்றும் எச்சரித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கு அரசால் முடியாமல் போயுள்ளது. இதனால், நாட்டை இராணுவமயப்படுத்த முயற்சிக்கிறது. இராணுவ மயமாக்கலைச் சட்டபூர்வமாக்க அரசு முனைகிறது.

150 ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பது போல, சிவில் விவகாரங்களில் விசாரணைகளை முன்னெடுக்கப் பொலிஸார் அனுமதிக்கப்படவேண்டும்.



மஹிந்த குற்றச்சாட்டு

இந்தப் பணி படையினருக்கு முதல்முறையாக வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டை இராணுவமயப்படுத்தும் முயற்சி.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலைகள் தொடர்பாக, விசாரணைகளை முன்னெடுக்கப் படையினர் அனுமதிக்கப்படுவது ஆபத்தானது.

தற்போதைய அரசு படைகளைப் பலப்படுத்துவதை விட்டுவிட்டு அவர்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களைக்கொடுக்கிறது. இதனை அனுமதிக்க முடியாது.

சட்டம் ஒழுங்கை பொலிஸார் பேண முடியாவிட்டால், பலவீனம் என்ன என்று விசாரணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.–என்றார். (ஐ)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்கு தாக்கலாகும்

## மஹிந்த அணி எச்சரிக்கை

கொழும்பு, ஓக 03

மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் தொடர்ந்தும் காலம் தாழ்த்திவருகின்றமை தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக கூட்டு எதிரணி எச்சரித்துள்ளது.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டில் தற்போது நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்தக்கொண்டே செல்கின்றன. உலகிலுள்ள எந்தவொரு அரசும் மேற்கொள்ளாத வகையில் இலங்கை அரசு மக்களைப் பழிவாங்கும் விதமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மஹிந்த அரசைக் குற்றம் சுமத்திவரும் இந்த நல்லாட்சி, 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டின் ஜனநாயகத்தைச் சவாலுக்கு உட்படுத்தியுள்ளது.

வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாணசபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளதோடு, அடுத்த மாதம் வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளின் பதவிக்காலமும் நிறைவடையவுள்ளது. ஆனால், இந்த அரசு தேர்தலை நடத்துவதற்கான எந்தவொரு சமிக்ஞையையும் காண்பிக்கவில்லை. இது மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிக்கும் செயற்பாடாகும்.

இவ்வாறான சர்ச்சைகள் நாட்டில் இருக்கும்போது எதிர்க்கட்சித் தலைவரோ இது குறித்து அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்காது, ஆதரவை வெளிப்படுத்தி வருகிறார்.

அவரது கட்சி பெரும்பான்மையாக இருக்கும் வடக்கு –கிழக்கு மாகாணசபைகள்வலுவிழந்துள்ள நிலையில்கூட எந்தவொரு கருத்தையும் கூறாமலேயே சம்பந்தன் இருந்துவருகிறார்.

இப்படியான ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்க தகுதியற்றவராவார். எனவே, தனது பதவியிலிருந்து அவர் உடனடியாக இராஜினாமா செய்யவேண்டும்.

இந்த அரசுக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாவிட்டால், பொதுத் தேர்தலையேனும் நடத்துமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம். நாம், எந்தத் தேர்தலாக இருந்தாலும் முகம்கொடுக்கத் தயார் நிலையிலேயே இருக்கிறோம் – என்றார். (ஐ)

# பரீட்சைக் கடமைகளில் இராணுவம் ஈடுபடாது

## தொழிற்சங்க பிரதிநிதிகள் - பரீட்சை ஆணையாளர் சந்திப்பில் இணக்கம்

கொழும்பு, ஓக 03

பரீட்சைக் கடமைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் எனப் பரீட்சை ஆணையாளர் கல்வியைப் பாதுகாக்கும் தொழிற்சங்க ஒன்றியத்திடம் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக் கடமைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவது தொடர்பாக – பரீட்சை திணைக்களத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த நிலையில் –இவ்வாறு இராணுவத்தினரைப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுத்தக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து – இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளர் சனத் பூஜிதவுடன் – கல்வியைப் பாது காக்கும் தொழிற்சங்க ஒன்றியத்தினர் நேற்றுக் காலை கந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது, நடைபெறவிருக்கும் பொது பரீட்சைக் கடமைகளில் மேலதிக பரீட்சை மேற்பார்வையாளர்களாக இராணுவத்தினரை ஈடுபடுத்த தற்போதைய அரசு மேற்கொண்ட தீர்மானத்தை உடனடியாக நிறுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இவ்வாறான இராணுவமயமாக்கலை அனுமதிக்க முடியாது எனத் தொழிற்சங்க ஒன்றியத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், தற்போது இலங்கை பாடசாலைகளில் 41,000 ஆசிரியர்களும், 11000 அதிபர்களும் பணியாற்றுகின்ற நிலையில் பரீட்சைக் கடமைகளுக்கு அண்ணளவாக 3000 பேரே தேவைப்படுவர். இவ்வாறான நிலையில் போதிய ஆளணியினர் உள்ளபோது – இராணுவத்தினரைப் பரீட்சைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது அவசியமற்றது எனவும், இது இராணுவமயமாக்கல் செயற்பாடு எனவும், இதனை நிறுத்த வேண்டும் எனவும் தொழிற்சங்க ஒன்றியத்தினர் வலியுறுத்தினர்.

இவ்விடயம் தொடர்பான நீண்ட கலந்துரையாடலின் பின்னர் – பரீட்சைக் கடமைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதில்லை எனப் பரீட்சை ஆணையாளர் உறுதி வழங்கினார் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (ஐ)

# மக்களின் விவரங்களை திரட்டும் இராணுவம்

## விசுவமடுப் பகுதியில்

முல்லைத்தீவு, ஓக 03

விசுவமடு தொட்டியடிப்பகுதியில் நலைகொண்டுள்ள 57 ஆவது படைப்பிரிவின் 2ஆவது படைப் பிரிவினர் மக்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக அறிவித்து மக்களிடம் இருந்து விவரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என மக்கள் தெரிவித்தனர்.

வேலைவாய்ப்பு தருவதாக இரண்டு நாட்களுக்கு முன்னர் படையினரால் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. விசுவமடு தெட்டியடிப் பகுதியில் உள்ள 57ஆவது படைப்பரிவின் 2ஆவது படைமுகாமில் தகவல் திரட்டும் படிவம் ஒன்றைக் கொடுத்து பொதுமக்களிடம் அவர்கள் விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

பெருமளவான மக்கள் தங்கள் விவரங்களைக் கொடுத்துள்ளனர் எனவும், வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக படையினர் கூறினர் என்றும், அதற்காகக் காத்திருப்பதாகவும் அப்பகுதி இளைஞர்கள் கூறினர். (ஐ)

## சுயாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டு வருகின்றோம்.

இவ்வாறு நேற்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் முன்னிலையில் வலியுறுத்தினார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் இலங்கை முயற்சியாண்மை தொடர்பான விசேட கலந்துரையாடல் அதன் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா அம்மையார் தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டப்பத்தில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மூன்று தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட 48 பேர் கொண்ட கூட்டத்தில் மிக்க மனவருத்தத்துடன் கலந்துகொள்ளாது விட்டேன். காரணமும் கூறினேன். ஜனாதிபதி எனக்கு மிகவும் வேண்டியவர். அவரின் மனதைப் புண்படுத்த எனக்கு எந்த விதத்திலும் தேவையுமில்லை, மனமும் இல்லை. அவருக்கு என்னால் அரசியல் ரீதியாகத் தெரிவிக்கப்பட்ட கருத்து எங்களை நாங்களாக வாழ உதவி புரிய வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டது.

நீங்களாக முடிவெடுத்து எம்மை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காதீர்கள் என்பதையே அவருக்கு சுட்டிக் காட்டினேன். சந்திரிகா அம்மையாருக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த டி.பி.விஜயதுங்க சிங்கள மக்கள் மரமென்றால் சிறுபான்மையோர் அதைச் சுற்றி வளரும் கொடி போன்றவர்களாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்றார். அந்தக் கருத்துடன் எமக்கு ஏற்பில்லை. எம்மையும் சிறு மரங்களாக நாம் விரும்பும் விதத்தில் வாழ வழி வகுத்துத் தாருங்கள் என்பதே எமது கோரிக்கை. இன்று சந்திரிக்கா அம்மையார் இந்த நிகழ்வில் இங்கு பங்குபற்றி எம்மை ஊக்குவிக்கின்றார் என்றால் அவரின் கருத்துக்களும் மேலிருந்து எமக்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆணை இடுவதை விட்டு கீழிருந்து நாம் செய்வதை உன்னிப்பாக கவனித்து எம்மை உயர்வடைய வைக்க அவர் ஆயத்தமாக இருக்கின்றார் என்று அர்த்தம்.

மேலிருந்து கீழ் நோக்கி உத்தரவிடும் அணுகுமுறையை விடுத்து, எங்கள் தொழில் முயற்சியாளரை அருகில் இருந்து – பக்கத்தே நின்று – ஒரு தாய் தனது பிள்ளைகள் வளர்ந்து மேன்மை அடைகின்றமையை அருகில் நின்று அவதானிப்பதுபோல – ஊக்குவிப்பதற்காக நீங்கள் இங்கு நேரில் வந்திருக்கின்றமை கண்டு நாம் மகிழ்கிறோம். அதைத்தான் நாங்கள் அரசியலிலும் வேண்டி நிற்கின்றோம். எமக்கென சுயாட்சி தந்து எம்மை நாமாகத் திறம்பட விருத்தியடைய வைக்க உதவ வேண்டும் என்று கேட்கின்றோம். மக்களுக்கான தொழில் முயற்சிகள் மக்களால் தொடங்கப்பட்டு நடத்தப்படுவன. அரசாங்கம் அதைச் செய்து கொடுப்பதில்லை. அதையே அரசியல் கோட்பாடாக நடைமுறைப்படுத்த நாம் கோருகிறோம்.

தயவு செய்து மத்தியில் இருந்து எங்களைக் கட்டுப்படுத்தாதீர்கள் நாங்கள் நாங்களாகவே உழைத்து மேம்பட இடமளியுங்கள். நாங்கள் மேன்மை அடைந்து மலர இடமளித்தால், நாங்கள் பின்னர் பத்துமடங்கு உங்களுக்குத் திருப்பி உதவுவோம்.

அரசியலில் எல்லா மாகாணங்களுக்கும்தான் நாம் சமஷ்டி கோருகிறோம். எல்லா மாகாணங்களும் சமஷ்டி மூலம் மேன்மை அடைய – தாய்க் கோழி தனது குஞ்சுகளைப் பார்த்து பூரிப்படைவது போல அதனைப் பார்த்து மத்தி புளகாங்கிதம் அடையட்டுமே.

சுயாட்சி தந்து எம்மை நாமே ஆள விடுங்கள் என்று அரசியலில் நாம் கோருகின்றோம். நீங்கள் மத்தியில் இருந்து தாய்க் கோழி குஞ்சுகள் வளர்வதைப் பக்குவ மாய்ப் பார்த்து வருவது போல் எங்களைப் பார்த்து வாருங்கள் என்றே எமது அரசியல் கருத்துக் களை வெளியிட்டு வருகின்றோம்.

இன்று தொழில் முயற்சியாண்மையை ஆதரிக்கும் நீங்கள் அரசியலிலும் எமது முயற்சியாண்மையை ஆதரிக்க முன்வர வேண்டும். நாங்கள் பிரிந்து சென்று விடுவோம் என்ற கருத்துக்கு இடமில்லை. ஏனென்றால் மத்தி தாயாக வாழ எத்தனித்தால் மாகாணங்கள் தனையர்களாகவே இருக்க ஆசைப்படுவார்கள். குபேக்கைப் பாருங்கள்! ஆங்கிலக் கனடாவை விட்டு பிரான்சியர்களான நாம் பிரிந்து செல்ல மாட்டோம் என்று கருத்துத் தெரிவித்திருந்தார்கள். ஆகவே இலங்கை முயற்சியாண்மை என்ற சிறுதொழில், மத்திம தொழில் முயற்சியாளர்களுக்கு உதவி வழங்கி ஊக்குவிக்கும் இந்த செயற்பாடு மேலும் மேலும் வளர்ச்சியடைந்து எமது மக்களை சுயகௌரவத்துடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ வழி வகுக்க வாழ்த்துகின்றேன்.

அதே வாழவைக்கும் இந்தக் கருத்தை எமது அரசியல் யாப்பிலும் உள்ளடக்கி பிராந்திய சுயாட்சியை உத்தரவாதப்படுத்த அம்மையார் அவர்கள் முன்வர வேண்டும் என்று அவரை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். அவரே முதன் முதலில் பிராந்தியங்களின் ஒன்று கூடிய நாடே இலங்கை என்ற கருத்தை 2000மாம் ஆண்டளவில் எமது அரசியலில் முன்வைத்தவர். அவரின் வருகைக்கு நன்றி கூறி என்னை அழைத்தமைக்கு நன்றி கூறி நான் அமர்கின்றேன். – என்றார்.

(ஐ–7)

## கூரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் நேற்று அவர் அனுப்பி வைத்த கேள்வி – பதில் பின்வருமாறு அமைந்தது:–

கேள்வி:எதிர்க்கட்சித் தலைவர் தவராசா அவர்கள் மாகாண சபையை நடத்த வலுவற்ற முதல்வர் வடக்கில் வன்முறையை எப்படி அடக்குவார் என்று கேட்டுள்ளார். உங்கள் பதில் என்ன?.

பதில்: தன் கட்சி தன்னை எதிர்க்கட்சிப் பதவியில் இருந்து நீக்கியும் அவர் தொடர்ந்து அந்தப் பதவியில் இருக்கின்றாரே. அது போலத்தான் முடியாது என்று எதுவும் இல்லை. பொலிஸாருடனும் நீதியுடனும் தொடர்புடையவன் நான். குற்றவாளிகள் சம்பந்தமாக தொழில் ரீதியாக நான் பல வருடகாலம் செயற்பட்டவன். இப்பொழுது கூட பல தடயங்கள் எனக்குத் தரப்பட்டுள்ளன. ஆனால் வேலிகள் பயிரை மேய விடக்கூடாது. சட்டம், ஒழுங்கு எனக்குப் பரிச்சயமான ஒரு துறை. ஆனால் அதற்கு அதிகாரம் கையில் இருக்க வேண்டும். அதிகாரம் கையில் இல்லாமல் எம்மால் செயலாற்ற முடியாது.

எமது அதிகாரங்களை மற்றவர்கள் மடக்கிப் பிடித்ததால்தான் நாங்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மாகாணசபை சட்டத்தில் உள்ள அதிகாரங்களை மட்டும் படித்துவிட்டுப் பத்திரிகைகளுக்கு ஒப்புவித்தால் அது போதாது. மற்றைய சட்டங்கள் எவ்வாறு மாகாண சபையை வளைத்துப் பிடித்து செயலற்றதாக்கின்றன என்பதையும் அவர் உணர வேண்டும். உதாரணத்திற்கு உள்ளூராட்சியின் முன்னேற்றம் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கட்டுப்படுத்தப்படுகிறது.

காணிகள் மீது எமக்கிருக்கும் உரித்துக்களை மகாவலிச்சட்டம் நலிவடையச் செய்துள்ளது.

மாகாணப் பாடசாலைகளின் முன்னேற்றங்கள் தேசியப் பாடசாலைகளை வைத்து அவற்றுள் உள்நுழைந்து கட்டுப்படுத்தப்படுகின்றன.

எமது வைத்தியசாலைகளின் முன்னேற்றம் தேசிய வைத்தியசாலைகள் ஊடாக மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படுகின்

பக்கம் 14

## விடுதலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவிராஜின் துணைவியார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டதோடு எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிட்டது.

நீதியரசர்கள் தீபாலி விஜேசுந்தர, அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை நேற்று விடுத்தது.

தமிழரசுக் கட்சியின் எம்.பியாகவிருந்த ரவிராஜும் அவரது மெய்க்காப்பாளரும் 2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி கொழும்பில் வைத் துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. ஆறு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டபோதிலும் அவர்களில் இருவர் பின்னர் உயிரிழந்துவிட்டனர் எனக் கூறப்பட்டது. ஒருவர் காணாமல் போனார். மூவர் மீது வழக்குத் தொடர்ந்து நடத்தப்பட்டது.

எதிரிகள் மீது சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழும், அதே சமயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

எனினும் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த வழக்கை சிங்களம் பேசும் ஜூரிமார் முன்னிலையில் நடத்துமாறு எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகள் கோரினர். ஆனால் பாதிக்கப்பட்ட ரவிராஜ் குடும்பத்தவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அதை ஆட்சேபித்தார். ஆனால் நீதிமன்றம் அதை நிராகரித்து விட்டு சிங்கள ஜூரிமார் கொண்ட ஆயத்தில் அதை விசாரித்தது. சிங்கள ஜூரிமாரின் பரிந்துரைக்கு அமைய எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்து மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஒன்று – தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு வழக்கு.

அடுத்தது – இந்தக் கொலைச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட ரவிராஜின் துணைவியார் சார்பில் தீர்ப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு.

மூன்றாவது – மேல்நீதிமன்றத் தீர்ப்பை மீளாய்வு செய்யக் கோரி ரவிராஜின் துணைவியார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு.

இதில், ரவிராஜின் துணைவியார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டையே நேற்று விசாரணைக்கு ஏற்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட வழக்கை ஜூரிமாரைக் கொண்ட ஆயத்தில் விசாரிக்கத் தீர்மானித்தமை சட்டத்தவறு என்றும் –

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணையின் முடிவை ஜூரிமார் கொண்ட ஆயத்தின் பரிசீலனைக்கு விட்டு அந்த ஜூரிமாரின் பரிந்துரையின் அடிப்படையில் விடுதலைத் தீர்ப்பு வழங்கியமை சட்டத்துக்கு முரணானது என்றும் –

ரவிராஜின் துணைவியாரான மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்த வாதத்தை செவிமடுத்த பின்னரே இந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்றது.

இந்த வழக்கை டிசெம்பர் 4ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

ரவிராஜ் படுகொலை வழக்கில் எதிரிகளை விடுவித்து மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் செய்துள்ள மேன்முறையீட்டு வழக்கையும் –

மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கை மீளாய்வு செய்ய உத்தரவிடக் கோரி திருமதி ராவிராஜ் சார்பில் தாம் தாக்கல் செய்த மற்ற வழக்கையும் –

அதே டிசெம்பர் 4ஆம் திகதி இந்த வழக்குடன் சேர்த்து ஒன்றாக நீதிமன்றத்தில் எடுப்பதற்குரிய விண்ணப்பத்தைத் தாம் செய்யவுள்ளார் என சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ரவிராஜ் கொலை வழக்கில் மேல்நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட எதிரியில் ஒருவரான 'நேவி சம்பத்' என்பவர் பின்னர் தலைமறைவானார் என்பதும் –

பதினொரு தமிழர்கள் கடற்படையினரால் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் இவர் தேடப்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

மனுதாரர் சார்பில் மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் ஆகியோர் ஆஜரானார்கள்.

விடுதலையான எதிரிகள் சார்பில் சட்டத்தரணி காமினி செனவிரத்னவும், சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் றோஹாந்த அபேசூரியவும் பிரசன்னமாகியினர். (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக யாழ். மாநகர வாக்காளர் ஒருவர் மூலம் கூட்டமைப்பினர் தொடுத்த வழக்கு இன்று மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் பூர்வாங்கப் பரிசீலனைக்கு வருகின்றது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிக்காத மணிவண்ணன் மாநகரசபை உறுப்பினராக இருக்க முடியாது என்பதுதான் வழக்கின் சாரம்.

கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் வதியும் மணிவண்ணன் யாழ். மாநகரசபைக்கான தேர்தலில் போட்டியிட்டமை தவறானது என்று உத்தரவிடக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர் மனுதாரரான மணிவண்ணன் யாழ். மாநகர சபை உறுப்பினராகச் செயற்படுவதற்குத் தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என மனுதாரர் தரப்புக் கோருமானால், அது தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட – வரையறுக்கப்பட்ட – ஆட்சேபனை ஒன்றைத் தாங்கள் தாக்கல் செய்ய விரும்புகின்றனர் என்று மணிவண்ணன் சார்பில் முதல் தவணையின் போது நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சி.வி.வி.புவிதரன் தெரிவித்தார். அதற்கு அனுமதியும் அளிக்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனை மனு ஒன்று மணிவண்ணன் தரப்பினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில் ஆஜராகும் மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியாக எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இந்த ஆட்சேபனை மனுவில் சில விடயங்களை உற்றுக் கவனித்து, இன்று சட்டவாதம் செய்யத் தயாராகி வருகின்றார் என்று சட்டவட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

எதிர்மனுதாரர் தரப்பின் ஆட்சேபனை மனுவில் –

'மணிவண்ணனின் தந்தையாரின் வீடுதான் கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் உள்ளது. அவர் யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் 58ஆம் இலக்க இல்லத்தில் ஒரு கட்டடத்தைக் கொள்வனவு செய்துள்ளார். அதேசமயம் 884, கே.கே.எஸ். வீதியில் உள்ள ஓர் இல்லத்தையும் குத்தகைக்கு எடுத்து அங்கும் தங்கியுளார். ஆகையினால் அவர் யாழ். மாநகரசபை பிரதேசத்திலேயே வசிக்கின்றார்.' – என்ற வாதம் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இதற்கு ஆதாரமாக யாழ். இராமநாதன் வீதி கட்டடக் கொள்வனவு ஆவணம், கே.கே.எஸ். வீதி இல்லக் குத்தகை ஆவணம் ஆகியவையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தகவல்.

ஆனால், இந்த ஆவணங்களில்தான் சில ஓட்டைகளை சுமந்திரன் தரப்புக் கண்டு பிடித்து வாதத்துக்குத் தயாராக இருப்பதாகத் தெரிகின்றது.

இராமநாதன் வீதிக் கட்டட விற்பனை டிசெம்பரில் நடந்ததாகக் கூறப்பட்டாலும், அதைப் பதிவு செய்வதற்காக முத்திரையிடப்பட்ட திகதி டிசெம்பரில் யாழ். மாநகரசபை வேட்புமனுத் தாக்கலுக்குப் பின்னரான ஒன்று எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

கே.கே.எஸ். வீதி குத்தகை ஒப்பந்தம் காணிப் பதிவகத்தில் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்ட ஒன்றல்ல. அது மாத்திரமல்லாமல், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் யாழ். மாநகரசபைக்கு இரண்டாம் வட்டாரத்தில் போட்டியிட்ட செந்தில்குமரன் என்பவர் இதே கே.கே.எஸ். வீதி விலாசத்தைத்தான் வேட்பு மனுவில் தமது வதிவிட விலாசமாகக் குறிப்பிட்டிருக்கின்றாராம்.

மணிவண்ணன் தமது வேட்பு மனுவில் 'இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்' என்று தமது விலாசத்தைக் குறிப்பிட்டிருந்தாலும், இப்போது அந்த வீதியில் அவர் குறிப்பிடும் ஒரு கட்டடம் வேட்புமனுத் திகதிக்குப் பின்னர்தான் அவரது பெயருக்கு மாற்றுவதற்கான முத்திரை செலுத்திப் பதியப்பட்டுள்ளது.

மற்றொரு வேட்பாளரின் யாழ். விலாசமும் தன்னுடையதே என்று குறிப்பிட்டு மணிவண்ணன் தரப்பினால் சமர்ப்பிக்கப்படும் குத்தகை ஒப்பந்தமும் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்ல.

இந்தப் பின்புலத்தில் இந்த இரு ஆவணங்களிலும் அடிப்படையில் மணிவண்ணன் மாநகரசபை எல்லைக்குள் சட்டரீதியாக வசிப்பவர்தான் என்ற முடிவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வருமா, அல்லது அவருக்கு எதிராக இடைக்கால உத்தரவு ஏதும் பிறப்பிக்குமா என்பது பெரும்பாலும் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே, இரட்டைப் பிரஜாவுரிமைச் சிக்கலில் சிக்கியிருக்கும் ஈ.பி.டி.பியின் பிரதிநிதி ஜெகன், யாழ். மாநகரசபை உறுப்பினராகச் செயற்படுவதற்கு சுமந்திரன் தரப்பு இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பெற்றிருப்பது தெரிந்ததே.

இன்று என்ன நடக்கப் போகின்றது என்று பொறுத்திருந்து பார்ப்போம்...!

**- மின்னல் -**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் மூலம் அமெரிக்கா கொடுத்த உறுதிமொழி

**கொழும்புக்குச் சென்றிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை கொழும்புக்கான அமெரிக்காவின் பதில் தூதுவர் ரொபோட் ஹில்டன் நேரில் அழைத்துப் பேசியிருக்கின்றார்.**

**சத்தம் சந்தடியின்றி நடைபெற்ற இந்தச் சந்திப்புப் பற்றிய தகவல் முதலமைச்சர் பக்கத்தில் இருந்து வரவில்லை.**

**பதிலாக, அமெரிக்கத் தரப்பிலிருந்து, அதுவும் பதில் தூதுவர் ஹில்டன் பக்கத்தில் இருந்துதான் அது பற்றிய தகவல் வந்திருக்கின்றது.**

**அதுவும், அவர் தமது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட செய்தி மூலம்தான் அந்த விடயம் அம்பலமாகியிருக்கின்றது.**

**இதுவரை இருந்த அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப் இலங்கை விவகாரத்தில் அதீத ஈடுபாடும் பங்களிப்பும் காட்டியவர். அவரது இராஜதந்திர நகர்வுகள், நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் அவ்வப்போது பரபரப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.**

**இலங்கையில் தனது பதவிக்காலத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் சமயத்தில் இங்குள்ள அரசியல் தலைவர்களுடன் அவர் நடத்திய பிரியா விடைச் சந்திப்புகள் கூட பரபரப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.**

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, அவரின் இல்லத்தில் சென்று கடைசியாகச் சந்தித்த கெஸாப், யுத்தக் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ, அவரது இரட்டைப் பிரஜாவுரிமையில் ஒன்றான அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் துறப்பதாயின் அதில் உள்ள சிக்கல்கள் குறித்து கெஸாப் பிரஸ்தாபித்தார் என்று குறிப்பிட்டு வெளியான செய்தி மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டது.**

**கெஸாப்புக்கு பின்னர் இப்போது தற்காலிகமாக பதில் தூதுவர் பதவியை ஏற்றிருக்கும் ரொபேர்ட் ஹில்டனும் தாமும் பரபரப்பை ஏற்படுத்துவதில் சளைத்தவர் அல்லர் என்பதைக் காட்ட முயன்றிருக்கின்றார் போலும்.**

**முதல்வர் விக்னேஸ்வரனுடனான சந்திப்புக் குறித்துத் தமது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்ட கருத்தும், முதல்வர் விக்னேஸ்வரனுடன் மிக நெருக்கமாக அவர் காட்சியளிக்கும் படமும் வெளிப்பார்வைக்கு அது ஒரு சாதாரண சந்திப்புப் போன்ற எண்ணத்தைத் தந்தாலும் கூட, இராஜதந்திர நோக்கில் வேறு பல அர்த்தங்களை அது தந்து நிற்பதாக நோக்கர்கள் குறிப்பிடுகின்றார்கள்.**

**மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக இலங்கையும் சேர்ந்து நிறைவேற்றிய 2015 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கத் தீர்மானத்தையும், 2017 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கத் தீர்மானத்தையும் இலங்கை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும் என்று முதல்வர் விக்னேஸ்வரனிடம் அமெரிக்காவின் பதில் தூதுவர் உறுதியளித்தார் என்றுதான் அந்தச் செய்தி சொல்கின்றது.**

**மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ இலங்கையின் செயற்பாட்டுக்கு அமெரிக்கா உதவி அளிப்பது போன்ற சொல்லாடல்களை அது கொண்டிருந்தாலும், அதற்குள் புதைந்து கிடக்கும் அர்த்தங்கள் வித்தியாசமானவை; வேறுபட்டவை; முரணிலையானவை.**

**இந்தத் தீர்மானங்கள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டமையின் பின்புலத்தில் அமெரிக்கா முழு அளவில் செயற்பட்டு பங்களித்தது. அமெரிக்க வழிகாட்டலிலேயே அது முன்னெடுக்கப்பட்டது.**

**யுத்த காலத்தில் இடம்பெற்ற சம்வங்களுக்குப் பொறுப்புக் கூறல், உண்மைகளைக் கண்டறிதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை வலியுறுத்தும் இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், கவுன்ஸிலில் இருந்து வெளியேறும் முடிவை அமெரிக்கா எடுத்திருந்தது.**

**அப்போதைய சர்வதேச நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக இந்தத் தீர்மானங்களைத் தானும் சேர்ந்து நிறைவேற்றிய இலங்கை, அதன் மூலம் தான் ஒப்புக் கொண்ட கடப்பாடுகளை நிறைவேற்றாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது.**

**கவுன்ஸிலில் இருந்து அமெரிக்கா வெளியேறிய இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மேற்படி இரு தீர்மானங்களில் இருந்தும் இலங்கை வெளியேறி விட வேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கை அரசியல் தரப்பில் மெல்ல வலுத்து வருகின்றது. குறிப்பாக தெற்கில் அரசியல் ரீதியாகப் பலமடைந்து வரும் கூட்டு எதிரணித் தரப்பில் இருந்து இந்த முடிவு வலிமையாக வற்புறுத்தப்படுகின்றது.**

**அப்படி சர்வதேச அரங்கில் மற்ற நாடுகளுடன் சேர்த்து தான் ஒப்புக் கொண்ட இணக்கத்திலிருந்து – கடப்பாட்டிலிருந்து – ஒரு தலைப்பட்சமாக கொழும்பு நழுவி விலகுவதற்கு இடமளிக்கமாட்டோம் என்ற அமெரிக்கத் தரப்பின் நிலைப்பாட்டையே, முதல்வர் விக்கியை அழைத்துப் பேசி, உறுதியளித்துவிட்டு, தனது பதில் தூதுவரின் டுவிட்டர் பக்கம் மூலம் அம்பலப்படுத்தி வெளிப்படுத்தியிருக்கின்றது அமெரிக்கா.**

**இலங்கை தொடர்பாக அமெரிக்காவின் இராஜதந்திர நகர்வின் ஒரு முக்கிய கட்டத்தைப் பிரதிபலிக்கின்றது இந்த டுவிட்டர் செய்தி என்றால் அது மிகையில்லை.**

# எம்.பிக்கள், அமைச்சர்களுக்கான கொடுப்பனவை உயர்த்தமுடியாது

## கூட்டு எதிரணி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓக 03

வரிச்சுமையால் மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள கூட்டு எதிரணி, அது நியாயமற்ற செயல் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் தற்போது அவர்கள் பெற்றுக்கொள்ளும் கொடுப்பனவை விட, 215 சதவீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு, 54,285 ரூபாவிலிருந்து 120,000 ரூபாவாகவும், பிரதி அமைச்சருக்கான கொடுப்பனவு, 63,500 ரூபாவிலிருந்து 135,000 ரூபாவாகவும், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான கொடுப்பனவுகள், 65,000 ரூபாவிலிருந்து 140,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க, நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையை மறைத்து மக்களைத் திசைத்திருப்பும் ஒரு செயற்பாடே இதுவென தெரிவித்துள்ளார்.

ஒன்றிணைந்த எதிரணி இந்த விடயத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த சம்பள அதிகரிப்பு நியாயமற்றது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். அடுத்த நாடாளுமன்ற அமர்வில் இதுத்தொடர்பில் நாம் எமது எதிர்ப்பினை வெளியிடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பரீட்சை கண்காணிப்பாளர்களாக இராணுவத்தை நியமிக்க எதிர்ப்பு

கொழும்பு, ஓக 03

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை கா.பொ.த உயர்தரப் பரீட்சையின்போது கண்காணிப்பாளர்களாக நியமிப்பதற்கு அனைத்து கல்வி சார் அமைப்புகளும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

இராணுவ அதிகாரிகளைப் பரீட்சைக் கண்காணிப்பாளர்களாக நியமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கல்வியுடன் தொடர்புடைய பெரும்பாலான அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இராணு அதிகாரிகளைப் பரீட்சையின்போது கடமைக்கு அமர்த்துவது தொடர்பில் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வி சார் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

13 கல்வி சார் தொழிற்சங்கங்கள், இதுத் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜிதவை சந்தித்து கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

முன்னாள் இராணுவ அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் மற்றும் அரச சேவையில் இருந்தவர்களையும் 2,268 பரீட்சை நிலையங்களில் கண்காணிப்பாளர்களாக நியமிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கடைகளில் போலிப் பருப்பு பொதுமக்களே அவதானம்

கொழும்பு, ஓக 03

நிறமூட்டப்பட்ட தரமில்லாத பருப்பு வகைகள் சந்தையில் விற்பனை செய்யப்படுவது தெரியவந்துள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான தரமற்ற பருப்பு வகைகள் இரத்தினபுரி மாவட்டத்தின் பல பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பருப்பைக் கழுவும் போது நீர் சிவப்பு நிறமாக மாறுவதுடன் இந்தப் பருப்பை வேக வைக்க வழமையைவிடக் கூடுதலான நேரம் எடுக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அந்தச் சங்கம், இவ்வாறான பருப்பு வகை விற்பனை செய்பவர்களை இணங்காணுமிடத்து பிரதேசத்தில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு முறையிடுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

(ஐ)

# ரங்கிரி மைதானத்தினுள் குழப்பம்; 10 பேர் கைது

கொழும்பு, ஓக 03

தம்புள்ளை ரங்கிரி மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 10 பேரை கைது செய்துள்ளதாக தம்புள்ளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது மைதானத்தின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த காவல் அதிகாரி உட்பட இரண்டு பேர் காயமடைந்தநிலையில்தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் இந்த அசாதாரண சூழ்நிலைக்கான காரணம் என்னவென்று இன்னும் கண்டறியப்படதாத நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மருத்துவச் சபையின் தலைவர் இராஜினாமா

கொழும்பு, ஓக 03

இலங்கை மருத்துவ சபையின் தலைவர், பேராசிரியர் கொல்வின் குணரத்ன தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தைச் சுகாதார அமைச்சிடம் கையளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவச் சபையில் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகள் காரணமாகவே தாம் பதவியை இராஜினாமா செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

மருத்துவச் சபையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகாவின் பதவிகாலம் நிறைவடைந்ததையடுத்து, அந்தப் பதவிக்கு கடந்த 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி கொல்வின் குணர்தன நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அலோசியஸ், கசுன் தொடர்ந்து மறியலில்

கொழும்பு, ஓக 03

பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பளிசேன ஆகியோரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் இருவரையும் எதிர்வரும் 09ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

## நாளை

**04.08.2018**
**சனிக்கிழமை**

நட்சத்திரம் : அச்சுவினி மு.ப 11.56 வரை
திதி : ஸப்தமி மு.ப 8.09 வரை
சுபநேரம் : 3.04 – 4.34 வரை
இராகுகாலம் : 9.04 – 10.34 வரை

# நல்லூர் உற்சவ காலத்தில் பண்பாட்டைப் பேணுங்கள்

## யாழ்.மாநகர முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 03

நல்லூர்த் திருவிழா உற்சவ காலத்தில் பாரம்பரிய கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணுமாறு தெரிவித்துள்ளார் மாநர முதல்வர் இமாநுவேல் ஆர்னோல்ட்.

பொதுமக்களின்பாதுகாப்பை உறுதி செய்வதற்கு 30 க்கும் அதிகமானகமெராக்கள்பொருத்தப்பட்டுக் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நல்லூர் உற்சவகால முன்னாயர்த்த நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் கலந்துரையாடல் நேற்று முன் தினம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது. இதன் போதே மாநகர முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லூர்கந்தசுவாமிகோவில் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை நடைபெறுவுள்ளது. இந்தப் புனித மான நாளில் ஆடம்பரங்களை வெளிப்படுத்தாமல் எமது பண்பாட்டு, கலாசார விழுமியங்கள் மாறாமல் திருவிழாவை முன்னெடுக்கவேண்டும். பல அதற்காக புதிய விடயங்களை முன்னெடுத்துள்ளோம்.

உலகில் உள்ள அனைத்துப் பாகங்களிலும் இரந்து தமிழ் மக்களும் கலந்து கொள்ளும் உன்னதமான திருவிழா இது. இந்தத் திருவிழாவை மையப்படுத்தி யாழ். மாநகரத்தின் அபிவிருத்தி இலக்குகளை ஆரம்பிக்க வேண்டும்.

எமது நகரத்தை தூய்மையாக அடையாளப்படுத்தி சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்பது எமது நோக்கமாகும்.

உற்சவகாலப் பணிகளுக்கெனத் தற்காலிகமாக 40 ஊழியர்களைப் பணிக்கமர்த்தவுள்ளோம். வியாபார நடவடிக்கைகளில் சிரமம் ஏற்பாடாத வகையில் இடவசதிகளை வடிவமைத்துள்ளோம்.

குறிப்பாக உற்சவ காலத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு பிரதியீடாக மக்கள் இலகுவாகப் பாவிக்கக்கூடிய பொருள்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். இவ் விடயம் தொடர்பில் சுற்றுச்சூழல் அதிகாரசபை சிறந்த சேவை வழங்க எம்மிடம் அனுமதி கேட்டுள்ளார்கள்.

நடைபாதை வியாபாரத்துக்கு விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.போக்குவரத்து ஏற்பாடுகள் அனைத்தும் உரிய முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சுத்தமானப் பசுமையான நகரை உருவாக்கும் தொனிப் பொருளில் இந்தத் திருவிழா நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளோம். எமது இலக்கை அடைய இது ஒரு சந்தர்ப்பமாக எமக்கு அமைந்துள்ளது.

மக்களுக்கு அச்சத்தை தற்போது ஏற்படுத்தும் போதை வஸ்து பாவனை இந்தக் காலத்தில் உச்சக்கட்டமாகக் கண்காணிக்கப்படவுள்ளது. விசேடமாக 30 க்கும் அதிகமான கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன. அத்துடன் பொலிசாரின் கண்காணிப்பு இம்முறை அதிகமாக இருக்கும்.

மின்சாரம், நீர், சுகாதாரம் என்பன சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்படவுள்ளன.

ஆலய நிர்வாகத்தினரால் அமைக்கப்படும் திரைச் சீலைக்கு உட்பட்ட எல்லைக்குள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகள், மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் ஒளிப்பதிவு நடவடிக்கைகள் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

சிறந்த மாநகரம் என்ற பெயருடன் பொதுமக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது எமது முக்கிய நோக்கம். எனவே வியாபாரிகள், பொதுமக்கள், ஊழியர்கள் முழு ஒத்துழைப்புடன் நடந்து சிறந்த முறையில் புனிதத்தன்மையுடன் இந்தத் திருவிழா காலத்தில் செயற்பட வேண்டும் .– என்றார்.

## வங்கியில் கொள்ளை; சந்தேக நபர் கைதானார்

கொழும்பு, ஓக 03

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரச வங்கியொன்றில் 15 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் 1000 ரூபா நாணயத்தாள் ஒன்றைக் காசுக் கருமபீடத்தில் வழங்கி அதனை மாற்றித் தருமாறு வங்கி அதிகாரியிடம் கோரியுள்ளார். இதனையடுத்து அதிகாரி பணத்தை மாற்றும் சந்தர்ப்பத்தில் அவரது கரும பீடத்திலிருந்து 15 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

இதன் பின்னர் சம்பவம் தொடர்பாக வங்கி அதிகாரிகள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைவாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 32 வயதுடைய பொரல்லஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், அவரைக் கல்கிஸை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் கல்கிஸை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கள்ளிக்குளத்தில் குப்பை, கழிவு கொட்ட சத்தியலிங்கம் எதிர்ப்பு

வவுனியா, ஓக 03

வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப்படும் குப்பைகள், கழிவுகள், கடந்த 50 வருடங்களாக பம்மைமடுப்பகுதியில் இதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டப்பட்டு வருகின்றது. எனினும் நேற்று முன் தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் குப்பைகளைக் கள்ளிக்குளம் பகுதியில் கொட்டுவதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் வவுனியா மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:

மேற்படி பிரதேசத்திற்கு அண்மையாக கடந்த 2013, 2014ஆம் ஆண்டுகளில் மக்கள் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் குப்பைகள் கொட்டும் இடத்தை மாற்றும் விடயங்கள் பற்றிப்பேசப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக 01.08.2018 அன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் குப்பைகள் கொட்டும் இடத்தை ஓமந்தை கள்ளிக்குளம் பகுதிக்கு மாற்றுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக அறியப்பட்டுகின்றது.

கள்ளிக்குளம் வவுனியாவின் பூர்வீகக் கிராமமாகும். 1977, 1983, 1990 காலப் பகுதிகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இக்கிராமத்திலிருந்து மக்கள் வெளியேறி தற்போது மீண்டும் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்தக் கிராமத்திற்கு குப்பைகள் கொட்டும் இடத்தை மாற்றும் முயற்சியானது ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தங்களின் கவனத் திற்குத் தெரியப்படுத்துகிறேன்.– என்றுள்ளது.

(ஐ)

## விபத்தில் சிக்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஓக 03

கொழும்பு – சிலாபம் பிரதான வீதியின் பண்டகாரவத்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனச் சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் அனுராதபுரம் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த லொறியொன்று மோட்டார்சைக்கிள் ஒன்றுடன் மோதிய இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்த மோட்டார்சைக்கிளின் சாரதி 33 வயதுடைய சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

அத்துடன் லொறியின் சாரதியை கைதுசெய்த பொலிஸார் அவரை சிலாபம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு வனப் பகுதியில் அதிகரிக்கும் குற்றச் செயல்கள்

### கண்டுகொள்ளாத அதிகாரிகள்

முல்லைத்தீவு, ஓக 03

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தென்னியன்குளம் வனப் பகுதியில் சட்டவிரோத காடழிப்பு, புதையல் தோண்டும் நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றபோதும் இந்த விடயங்களில் அதிகாரிகள் கவனமெடுப்பதில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வனப்பகுதியில் அண்மையில் சட்டவிரோதமாக புதையல் தோண்டும் நடவடிக்கை ஒன்று இடம்பெற்றுள்ளது. அந்தப் பகுதியில் பூசைகள் இடம்பெற்று கோழிகள் வெட்டப்பட்டுள்ளன. இதேபோன்று அங்கு ஒரு சோடி சப்பாத்தும் காணப்பட்டது. இதனால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர். புதையலைத் தோண்டு வதற்காகச் சிறுவர்கள் யாராவது வெட்டிப் பலி கொடுக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் அப்பகுதியில் குழப்ப நிலை காணப்படுகிறது

இந்தப் பகுதியில் சப்பாத்து இருப்பதாகப் பொலிஸாருக்கு 3 நாட்களுக்கு முன்னர் அறிவித்தபோதும் நேற்று அங்கு சென்ற பொலிஸார் சப்பாத்துக்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் உரிய விசாரணை மேற்கொண்டு என்ன நடந்தது என்பது கண்டறியப்படவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

(ஐ)

## உபபிரதேச செயலக வளாகத்துக்கு இயக்கச்சியில் அடிக்கல் நடுகை

கிளிநொச்சி, ஓக 03

இயக்கச்சியில் ஆயுர்வேத நிலையம், நூலகம், உப பிரதேச சபை ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் சமூக ஆர்வலர் ச.விக்கினேஸ்வரனால்நேற்றுமுன்தினம்நாட்டப்பட்டது.

இயக்கச்சியில் ஏ – 9 வீதியோரத்தில் இந்தக் காணி அமைந்துள்ளது. இந்தக் காணியில் முன்பு முள்ளிப்பற்று கிராம சபை இயங்கி வந்தது. அப்பொழுது இன்றைய வடமராட்சி கிழக்குப் பகுதியான செம்பியன்பற்று, மருதங்கேணி, தாளையடி, ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வண்ணாங்குளம், சுண்டிக்குளம், புல்லாவெளி, முள்ளியான், பெரிய பச்சிலைப்பள்ளி உள்ளிட்ட பிரதேசங்களோடு இயக்கச்சி, முகாவில், சங்கத்தார் வயல், கொற்றாண்டார் குளம், கோயில் வயல் ஆகிய பிரதேசங்களும் இந்தக் கிராம சபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்தன.

பின்னர் வடமராட்சி கிழக்கு தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு இது பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக் குட்பட்டு முள்ளிப்பற்று உப செயலகமாகியுள்ளது.

ஆனால், யுத்தத்தின் காரணமாக இந்த இடத்தில் இயங்கிய கிராம சபைக் கட்டடம் (உப செயலகம்) பொது நூலகம், தபால் நிலையம் அனைத்தும் முற்றாகவே அழிந்து விட்டன.



யுத்தத்திற்குப் பிறகு முன்னெடுக்கப்பட்ட வீதி அபிவிருத்திப் பணியில்உபசெயலகம் இயங்கிய காணியில் ஒரு பகுதி நெடுஞ்சாலைகள் சபைக் குரியதாகி விட்டது.

இந்த நிலையில் மேலதிக காணியை ஒதுக்கி புதிய செயலக வளாகத்துக்கென வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப. அரியரத்தினம், நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன், பச்சிலைப்பள்ளிப்பிரதேசசபையின் செயலாளர், தவிசாளர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அடிக் கல்லை நட்டு வைத்தனர். (ஐ – 100)

# யோகாசன வகுப்பு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.03

யாழ். இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் புதிய யோகாசன வகுப்பு நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பு பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி பயிற்சி வகுப்புக்கு வயது வேறுபாடு கிடையாது. உடல், உள ஆரோக்கியத்துக்கான பயிற்சியும் நெருக்கீட்டில் இருந்து விடுபடுவதற்கான பயிற்சி வழங்கப்படுகின்றது.

இந்தப் பயிற்சி வகுப்பு வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறும். பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்புவோர் இந்து சமயப் பேரவையினருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினசரி ராசி பலன் (03.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஷஷ்டித்திதி பகல் 12.08 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: ரேவதி பகல் 2.25 வரை பின்னர் அசுவினி. அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 10.43 மணி முதல் 12.16 மணி வரை.

**சுபநேரம்** - காலை 6.05 மணி முதல் 7.35 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத தேய்பிறை ஸப்தமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- ரேவதி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். திடீர் செலவுகள் உண்டாகும். தொழிலில் எதிர்பாராத விலைவாசி ஏற்றத்தால் விற்பனை குறையும். உடல் நலனில் கவனம் தேவை. மனக் குழப்பம் அதிகரிக்கும்.

**ரிஷபம்** சுபீட்சமான நாள். பணபலம், மன பலம் அதிகரிக்கும். மனதிற்கு ஏற்ற காரியங்களைச் செய்து எல்லோரையும் மகிழ்வார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மிதுனம்** மத்திம பலன்கள்காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அலைச்சல் காரணமாக உடல் அசதியும், உடல் நல குறைவும் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கவனம் எடுக்க வேண்டும்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். நினைத்த காரியம் ஈடேறும். வேலை தேடுவோருக்கு திறமைக்கேற்ற வேலை கிடைக்கும். சிலருக்கு அசையாச் சொத்து வாங்கும் யோகம் கிட்டும்.

**சிம்மம்** குழப்பமான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். மனம் குழப்பமடையும். குடும்பத்தில் அமைதி குன்றும். வேலை பார்க்கும் இடத்தில் பல சோதனைகள் உண்டாகும். சுறுசுறுப்பான செயலில் தடை ஏற்படும்.

**கன்னி** சுமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். தொழிலாளர்களின் வேலைப் பளு அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் ஞாபக மறதியால் சில பிரச்சினைகள் உண்டாகும்.

**துலாம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரத்தில் சிறப்பாக முன்னேற்றம் அடைவார்கள்.

**விருச்சிகம்** மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தொழிலில் மிகவும் கவனமாகச் செயற்பட்டு வியாபாரத்தை செழிப்படையச் செய்வார்கள்.

**தனுசு** சஞ்சலமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வரவுக்கு மீறிய செலவுகளால் மனம் குழப்பமடையும். செய் தொழில் விருத்தி குன்றும்.

**மகரம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். சிலருக்கு அலைச்சலும், கவலையும் உண்டாகும்.

**கும்பம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். பெண்களின் பேச்சாற்றல் சிறப்பாக அமையும். சுய தொழிலில் லாபம் கிட்டும். சிலருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். தொழிலில் வளர்ச்சியை உண்டாக்குவார்கள். தொழிலாளர்களின் எண்ணம் நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் மேம்படுவார்கள்.

சந்திராஷ்டம நாள்; மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# ஐந்து ஆண்டுகளில் தமிழ் மக்கள் மூன்றாம் இனமாக மாறும் ஆபத்து

## வடக்குக் கல்வி அமைச்சர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 03

எமது தமிழ் சமூகத்தின் பிள்ளைப் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க வேண்டும். இல்லையெனில் இன்னும் ஐந்து ஆண்டுகளில் நாங்கள் இலங்கையில் மூன்றாம் தர மக்களாக மாறி விடுவோம் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ்.மத்திய கல்லூரியின் 202 ஆவது பரிசில் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நான் ஒரு கல்வி அமைச்சராக வடக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளுக்குப் போயிருக்கிறேன். எமது மாகாணத்திலே 1010 பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் 120 பாடசாலைகள் 20 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்டிருக்கின்றன.

250 பாடசாலைகள் 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் நகரத்தின் சில பாடசாலைகள், பருத்தித்துறை நகரத்தின் சில பாடசாலைகள், கிளிநொச்சியின் நகரத்தல் ஒரு சில பாடசாலைகள், இதேபோன்று வவுனியா, மன்னார் போன்ற நகரங்களில் உள்ள சில பாடசாலைகளைத் தவிர மிகுதி அனைத்துப் பாடசாலைகளிலுமே மாணவர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் வடமராட்சிக் கல்வி வலயத்தில் மட்டும் முதலாம் தர மாணவர்களின் தொகை ஆயிரம் மாணவர்களால் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு வருடத்திலே ஒரு வலயத்திலே ஆயிரம் மாணவர்கள் குறைவடைந்திருக்கிறார்கள் என்றுசொன்னால் எங்கள் மாணவர்களின் எதிர்காலம், எங்களுடைய இருப்பினுடைய எதிர்காலம் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற போர் ஒரு மில்லியன் தமிழ் மக்களை நாட்டைவிட்டு வெளியேற்றியிருக்கிறது. இதை விட போராளிகள், பொது மக்கள் உட்பட மூன்றறை லட்சம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியோராக இருந்தாலும் சரி அல்லது கொல்லப்பட்டவர்களாக இருந்தாலும் சரி இவர்களின் வயதெல்லைகளைப் பார்ப்போமாக இருந்தால் பெரும்பாலானோர் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். ஆக இந்த மக்களும் எங்களிடம் இல்லை. இவர்களின் சந்ததிகளும் எங்களிடம் இல்லை. ஆகவே நாங்கள் மூன்று நான்கு தலைமுறையை இழந்திருக்கின்றோம்.

இப்போது இலங்கையின் சனத்தொகை பெருக்க விகிதம் முஸ்லிம்கள் ஆயிரம் பேருக்கு 8.7 பேர் அதிகரிக்கிறார்கள். சிங்களவர்கள் ஆயிரம் பேருக்கு 5.5 பேர் அதிகரிக்கிறார்கள் தமிழர்கள் 1.5 பேர் அதிகரிக்கின்றார்கள். தேசிய சராசரியை விட மிகமிக குறைவான மக்கள் தொகை அதிகரிப்பில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். கண்டிப்பாக எமது சனத்தொகை தொடர்பில் மீள் சிந்தனை கண்டிப்பாக எங்களுக்குத் தேவை.

இப்போது இருக்கும் சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் எமது இனம் சென்று கொண்டிருக்குமானால் நாங்கள் இன்னும் ஐந்து ஆண்டுகளில் இலங்கையின் மூன்றாவது இனமாக சுருங்கி விடுவோம். ஆகவே பாடசாலைகளுக்கு மாணவர்கள் குறைவு என்றால் எங்களுக்கு மாற்று வழிகள் இல்லை. எல்லோரும் அதிக குழந்தைகளைப் பெற்றேயாக வேண்டும். வேறு எந்த குறுக்கு வழிகளும் இதற்கு தீர்வு காண முடியாது .–என்றார். (ஐ)

# முடிவு எட்டப்படாமல் முடிந்த கட்சித் தலைவர்களின் கூட்டம்

கொழும்பு, ஓக 03

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் எந்த முறையின் கீழ் நடைபெறவேண்டும் என்பது குறித்து தீர்மானிப்பதற்காகக் கட்சி தலைவர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பு முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி மற்றும் கூட்டு எதிரணியின் தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்குச் சம்மதம் தெரிவித்தன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன், ஜனவரி 5 ஆம் திகதி முதல் 10 திகதி வரையான காலப் பகுதியில் தேர்தல் நடைபெறலாம் என குறிப்பிட்டார்.

கட்சித் தலைவர்கள் மத்தியில் இடம்பெறவுள்ள அடுத்த சந்திப்பில் இது தொடர்பான இணக் கப்பாடு எட்டப்படலாம் என அவர் தெரிவித்தார்.

இது அரசின் பிரச்சினையில்லை. மாறாக இது தேசியப் பிரச்சினை. இதன் காரணமாக அனைத்துக் கட்சிகளும் இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# ஓட்டோக்களைச் சேதமாக்கிய இருவர் பொலிஸாரால் கைது



வவுனியா, ஓக 03

வவுனியா – ஓமந்தையில் மதுபோதையில் வந்த இரு இளைஞர்களினால் நான்கு ஓட்டோக்களின் கண்ணாடிகள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை வவுனியா ஓமந்தைசந்தியில் அமைந்துள்ள ஓட்டோ தரிப்பிடத்திற்கு மது போதையில் வந்த இரு இளைஞர்கள் அங்கு நின்ற ஓட்டோச் சாரதிகளுடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது அங்கு தரித்து நின்ற நான்கு ஓட்டோக்களின் முன் கண்ணாடி உட்பட அனைத்துக் கண்ணாடிகளையும் உடைத்துவிட்டுத் தப்பிக்க முயன்ற வேளை அங்கு வந்த பொலிஸாரால் விரட்டி பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது

கொழும்பு, ஓக 03


வியாபார நிலையமொன்றில் சுமார் 12 இலட்சம் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிக்கணினிகள் கொள்ளையுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களைக் கைது கைது செய்துள்ளதாக கல்கிஸைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிஸை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடமிருந்து 17 கையடக்கத் தொலைபேசிகளும் 3 மடிக்கணினிகளும் கைப்பற்றப்பட்டதுடன் இவர்கள் தெஹிவளை, மாத்தறை மற்றும் ரன்ன பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கல்கிஸை பொலிஸார் கூறினர்.

# குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டிக்க முடியாத காணாமற் போனோர் பணியகத்தால் யாது பயன்?

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேள்வி



குற்றவாளிகளைத் தண்டிக்க முடியாத காணாமல்போன அலுவலகத்தினால், மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது என்று கேள்வி எழுப்பியுள்ளார், வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன்.

காணாமல் போனோர் அலுவலகமே மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய அலுவலகம் அல்ல. பரணகம ஆணைக்குழுவின் அறிக் கையில் பரிந்துரைகளுக்கு அமைய குற்றவாளிகளுக்கு அர சாங்கம் தண்டனையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக் குழு தற்காலிகமானது. ஆனால் தற்பொழுது அமைக் கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப் பட்டோர் அலுவலகம் நிரந்தர அலுவலகமாக இருக்கின்ற போதும், மக்களின் எதிர்பார்ப்புக் களைப் பூர்த்தி செய்யக் கூடிய ஓர் அலுவலகமாக அது தென்ப டவில்லை.

காணாமல்போனோர் அலுவலகத்தின் தலைவர் மனிதாபிமானம் மிக்க ஒருவர் என்பதுடன், பல தமிழ் இளைஞர்கள் சார்பில் நீதிமன்றங்களில் வாதாடியுள்ளார். அது மட்டும் ஓர் அலுவலகத்தை திறன்மிக்கதாக ஆக்காது.

பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் பிழை செய்தவர்கள் மற்றும் கைதுசெய்யப்பட்டவர்கள் என 2000 இற்கும் அதிகமானவர்கள் தொடர்பான விவரங்கள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கடந்த அரசிடம் வலியுறுத் தப்பட்டிருந்தது. இதுவரை எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபோன்றதொரு நிலை இந்த காணாமல் போன அலுவலகத்துக்கும் ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது. அது மாத்திரமன்றி இந்த அலுவலகத்துக்கு விசாரணை செய்வதற்கான அதிகாரம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. குற்றம் புரிந்ததாக காணப்பட்டால் அதுபற்றி உரிய தரப்புக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கத் தவறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த பிரதிபலனும் கிடைக்கப் போவதில்லை .

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகச் சட்டத்திலும் பிரிவு 13(2)ன் கீழ் குறித்த அலுவலகம் குற்றம் இழைத்ததாக அடையாளப்படுத்தப்பட்ட நபர்கள் மீது, அவ்வலுவலக அறிக்கைகளின் அடிப்படையில் அவர்களைக் குற்றம் செய்தவர்களாகவோ தவறு இழைத்தவர்களாகவோ கணிக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் நீதிவானின் கட்டளையின் பிரகாரம் ஒருவர் புதைக்கப்பட்ட இடத்தைத் தோண்டி பிரேதங்களை வெளியெடுக்க காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது. முன்னைய ஆணைக் குழுவுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை. வெளியெடுக்கப்பட்டு இறந்தவர்களின் பிரேதங்கள் அடையாளம் காணப்பட்டு மர ணத்திற்கான காரணங்கள் கூட வெளியிடப் படலாம். அதன் பின் இந்த அலுவலகம் என்ன செய்யலாம் என்பதும் தெளிவாக இல்லை.

விசாரணைகளின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர் கொலை செய்யப்பட்டார் என்று அறியப்பட்டு அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் அடையாளப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாவிட்டால் இந்த அலுவலகத்தால் எந்தப் பயனும் இல்லை.

2016ம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டமான தகவல் அறியும் சட்டத்தின் ஏற்பாடுகள் இந்தக் காணாமல் போனோர் அலுவலகச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த முடியாது என்றிருக்கின்றது. குற்றவாளிகளைப் பாதுகாத்து அவர்கள் பற்றிய விவரங்களும் வெளிவராமல் இந்தச் சட்ட ஏற்பாடு பாதுகாக் கின்றது. ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு முன் ஏற்பட்ட தீர்மானமானது காணாமல் ஆக்கப்பட்டோர் மீது தவறிழைத் தோர் சம்பந்தமாக நடவடிக்கை கள் எடுக்க வேண்டும் என்றிருக் கின்றது. ஆனால் தவறிழைத் தோர் பற்றிய செய்திகளை அந் தரங்கச் செய்திகளாக்கி அது சம் பந்தமாக தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விவரங்கள் அறிய முடியாது என்றிருப்பதும் கேள்விக் குறியாக உள்ளது.

குற்றங்களை இனம் காண வேண்டும், குற்றம் செய்தவர்களைச் சட்டப்படி குற்றவாளிகளாகக் காணப்பட்டபின் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் இன்றைய அரசாங்கத்திற்கு இல்லை. அப்படியாயின், மனித உரிமை மீறல்களை மூடிவைக்கும் உத்தேசம் இந்த அரசாங்கத்திற் கும் உண்டா என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த அலுவலகத்தால் ஆகக் கூடியது காணாமல் போன சிலருக்கு என்ன நடந்ததென்று அறிந்து கொள்ள கூடியதாக இருக்கும். ஆனால் அவர்களுக்கு மரணத்தை உண்டுபண்ணியவர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் தொடர்ந்து நல்லவர்கள் போன்று உலகில் உலாவரக் கூடிய வாய்ப்புக்கள் உருவாக்கி கொடுக்கப்படுகின்றது.

இவ்வாறான குறைபாடுகளுக்கு இலக்கான பரணகம ஆணைக்குழு போன்ற ஆணைக் குழுக்கள் சட்டத்தில் இருந்த குறைகளை நிவர்த்தி செய்ய சிபார்சு செய்த நடவடிக்கைகளை அடையாளம் கண்டு எவ்வகையில் காணாமல் ஆக் கப்பட்டோர் அலுவலகம் கருத் துடைய, அதிகாரமுடைய அலுவ லகமாக மாற்ற முடியுமோ அதற் கான நடவடிக்கைகளை எடுக் கப்பட வேண்டும்.- என்றார்

(உ)

## விஜயகலா தொடர்பான விசாரணைகள் முடிவு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்டு வந்த விசாரணைகள் முடிவடைந்திருப்பதாக, கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மீண்டும் வர வேண்டும் என்று கடந்த மாதம் யாழ்ப் பாணத் தில் நிகழ்த்திய உரையின் போது விஜயகலா மகேஸ்வரன் குறிப் பிட்டிருந்தார். இதையடுத்து அவரது பதவி பறிக் கப்பட்டதுடன், பொலிஸ் விசாரணைகளும் ஆரம் பிக்கப்பட்டன.

இந்த விசாரணைகளே முடிவுக்கு வந்திருக் கின்றன என சட்டமா அதிபரின் ஆலோசனைக் காக இன்னும் ஓரிரு நாள் களில் அது தொடர்பாக அறிக்கை அவருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள் ளது.

பொலிஸ் மா அதிப ரின் உத்தர வின் பேரில், விசேட பொலிஸ் குழு ஒன்று, யாழ்ப்பாணத்தி லும், கொழும்பிலும் பலரி டம் விசாரணைகளை நடத் தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## வடக்கு மாகாண முதல்வர் வேட்பாளர் யார் உரிய நேரத்தில் அறிவிக்குமாம் கூட்டமைப்பு




வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதையும், அதனை எப்போது அறிவிப்பது என்பதையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை உரிய நேரத்தில் ஒன்றுகூடி அறிவிக்கும் என இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினருமான மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

'வட மாகாண சபை முடிவடைவதற்கு இன்னும் காலம் இருக்கின்றது. கிழக்கு மாகாண சபை முடிவடைந்துள்ளது. இத்தகைய சபைகளுக்கான தேர்தல் எப்போது நடக்கும் என்பது தொடர்பில் இன்னும் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. இவ்வாறான சூழலில் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூறிவருகின்றார்கள். கூட்டமைப்பின் கட்சிகளுக்குள்ளும் இவ் வாறான கருத்துக்கள் வெளிவருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தேர்தல் அறிவிக்கப்படும்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் உரிய நேரத்தில் உரியவாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் ஒன்றுகூடி முடிவுகளை எடுப்பார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளால் எவ்விதமான குழப்பங்கள் வர மாட்டாது எமது மக்களுக்கு செய்யவேண் டியதை உரிய முறையில் செய்வோம் போலிக்குற்றச் சாட்டுக்களை மக்கள் முன் வைக்கமாட்டோம். எமது மக்களுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு அபிவிருத்தி போன்ற விடையங்களில் நாங்கள் சிரத்தையுடனே செயற்பட்டு வருகின்றோம் .- என்றார்

## படுகொலையான ஊடகவியலாளருக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு





யாழ்ப்பாணம், ஓக.03

யாழ்.கொக்குவில் பகுதியில் 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி படுகொலை செய்யப்பட்ட இளம் ஊடகவியலாளரும், யாழ். பல்கலைக் கழக முன்னாள் மாணவர் ஒன் றியத் தலைவருமான சகாதேவன் நிலக்சனின் 11 ஆம் ஆண்டு நினைவு கூரல் நிகழ்வு யாழ். நகரிலுள்ள ஊடகவியலாளர் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு, இரண்டு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகியது. இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் தாய், தந்தை, உறவினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், அவரின் ஞாபகார்த்த நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவித்து அஞ் சலி செலுத்தினர்.

## பாதாளக் குழுவின் உறுப்பினர் போதைப் பொருளுடன் கைது

### முன்னர் பொன்சேகாவுடன் இருந்தவராம்

கொழும்பு, ஓக.03

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவுடன் இருந்தவர் எனத் தெரிவிக்கப்படும், பாதாள உலகக்குழு உறுப்பினர் அருண காந்த அத்தநாயக்க விசேட அதிரடிப்படையினரால் நேற்று கைது செய்யப்பட் டுள்ளார்.

இவர், மினுவங்கொடப் பகுதியில் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தேக நபர் தன்வசம் வைத் திருந்த, 7.85 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 2.5 கிராம் புதிய வகை போதைப் பொருளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவர் முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுடன் இருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது என சிங்கள ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், கடுவெல பகுதியில் பொதுமக்கள் பேரணியில் பேசிய தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, இந்த சம்பந்தப்பட்டவர் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சம்பந்தப் பட்டிருக்கிறார் எனக் குற்றம் சாட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir





# இந்தியாவுக்கு சவாலாக சீனா

## இலங்கைக்கு வாரிக்கொடுக்கும் நிதி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், இருநூறு கோடி யுவான்களை கொடையாக வழங்க முன்வந்திருக்கிறார். அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புகின்ற எந்த திட்டத்துக்கு வேண்டுமானாலும் செலவிடலாம்

இலங்கையில் தமது செல்வாக்கை அல்லது தலையீடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதில், சீனாவும் இந்தியாவும், கடுமையான போட்டியில்தான் குதித்திருக்கின்றன என்பதை இரண்டு நாடுகளினதும் அண்மைய நகர்வுகள் தெளிவாக உணர்த்தி வருகின்றன.

ஒன்றுக்கு ஒன்று சளைக்காமலும், விட்டுக் கொடுக்காமலும், நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றமையைக் காண முடிகிறது.

இலங்கையில் பொருளாதார ரீதியான தலையீடுகளை மாத்திரமன்றி, அதனை தமது பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் பயன்படுத்தி வரும் சீனாவுக்கு இந்தியாவும் கடுமையான போட்டியைக் கொடுத்து வருகிறது.

இத்தகைய தருணத்தில், இந்தியா வின் எதிர் நகர்வுகளைத் தோற்கடிக்கும் நகர்வுகளுக்கு சீனாவும் விடாப்பிடியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை கைப்பற்றிய சீனாவுக்குப் பதிலடியாக, மத்தள விமான நிலையத்தை வளைத்துப் போடும் இந்தியாவின் நகர்வு அமைந்திருந்தது.

மத்தள விமான நிலையம் தொடர்பாக,



இந்திய அதிகாரிகள், கொழும்பில் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்த காலப் பகுதியில், சீனத் தூதுவர் செங் ஷி யுவான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்கச் சென்றிருந்தார். இது நடந்து கிட்டத்தட்ட மூன்று வாரங்களாகி விட்டன.

பொலன்னறுவவில், சிறுநீரக நோய்க் குச் சிகிச்சை வழங்கும் முழு வசதிகளையும் கொண்ட மருத்துவமனை ஒன்றை அமைக்கும் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்கான இறுதிக்கட்ட ஒழுங்குகள் பற்றிக் கலந்துரையாடுவதே சீனத் தூதுவரின் வெளிப்படையான நோக்கம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்குச் சென்றிருந்த போது, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, பொலன்னறுவவில் இந்த மருத்துவமனையை அமைத்து தருவதாக சீனா உறுதியளித்திருந்தது.

இந்த திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி பொலன்னறுவவில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சீனத் தூதுவர் செங் ஷியுவானும் பங்கேற்றிருந்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய போது தான், அந்த விடயத்தை வெளியே உடைத்துப் போட்டார். அதாவது மூன்று வாரங்களுக்கு முன்னர், சீனத் தூதுவர் தனது இருப்பிடத்துக்கு காவி வந்த செய்திதான் அது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கு, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், 2 பில்லியன் யுவான்களை கொடையாக வழங்க முன்வந்திருக்கிறார்.

அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்புகின்ற எந்த திட்டத்துக்கு வேண்டுமானாலும் செலவிடலாம் என்பது தான், சீனத் தூதுவர் காவிச் சென்ற செய்தி.

சீன ஜனாதிபதி வழங்க முன்வந்தது ஒன்றும் கடன் அல்ல, திருப்பி செலுத்தத் தேவையில்லாத நன்கொடை அது. அதுவும் சாதாரணமான அளவு அல்ல. 2 பில்லியன் யுவான் என்பது, கிட்டத்தட்ட 295 மில்லியன் டொலருக்குச் சமமானது. இலங்கை ரூபாவில், சுமார் 4 ஆயிரத்து 800 கோடி.

பொதுவாக, நாடுகளின் தலைவர் களின் பயணங்களின் போது தான் இந் தளவு பெரிய நன்கொடைகள் பற்றிய அறிவிப்புகள் வெளியிடப்படுவது வழக்கம்.

ஆனால், சீன ஜனாதிபதி, அத்தகைய எந்தப் பயணங்களும் இடம்பெறாத சூழலில், இந்த நன்கொடையை அறிவித்திருப்பது ஆச்சரியம்.

இரண்டு முக்கியமான விடயங்கள் பற்றிய விவாதங்கள் நடந்து கொண்டிருந்த சூழலில் தான், சீன ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியானது.

முதலாவது மத்தள விமான நிலையத்தை இந்தியாவுடன், இணைந்து இயக்குவது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த சூழல்.

இரண்டாவது, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரங்களுக்கு சீன நிறுவனம், 7.6 மில்லியன் டொலரை வழங்கியது என்ற குற்றச்சாட்டு சூடு பிடித்திருந்த சூழல்.

ஜனாதிபதித் தேர்தலில் சீன நிறுவனத்திடம் நிதி பெறவில்லை என்று நாடாளுமன்றத்தில் அடித்துச் சொல்லும் திராணி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இல்லாத நிலையில், இந்த விவகாரத்தை இனிமேலும் தோண்டிக் கொண்டிருக்கக் கூடாது என்ற சமிக்ஞையை கொழும்புக்கு வெளிப்படுத்தும் நோக்கில் தான், இந்த 4800 கோடி ரூபா நன்கொடை அறிவிப்பு வெளியிடப்பட்டது என்ற பரவலான ஒரு கருத்து உள்ளது.

அதாவது. மஹிந்த ராஜபக் ஜனாதிபதியாக இருந்த போது, அவருக்கு மாத்திரம் நன்கொடைகளை வழங்கவில்லை, தற்போதைய ஜனாதிபதிக்கும் கூட அத் தகைய நன்கொடைகள் வழங்கப்படுகின்றன என்று கணக்கைச் சமப்படுத்தும் யுக்தியாகவும் இதனைப் பார்க்கலாம்.

ஆனால், மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்கப்பட்டுள்ள 4800 கோடி ரூபா நன்கொடை, அவரது தனிப்பட்ட அல்லது தேர்தல் செலவுக்காக அளிக்கப்பட்ட ஒன்று அல்ல. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் ஏதாவது ஒன்றுக்குப் பயன்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும், 7.6 மில்லியன் டொலருக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அதுபற்றிய அரசாங்க கணக்கு வழக்குகளும் கிடையாது.

இங்கு, ஒன்றை மறைக்க இன்னொன்றைத் தூக்கிப் போடும் யுக்தியை சீனா கையாண்டிருக்கலாம். ஆனால், இது மாத்திரம் தான் சீனாவின் திட்டம் என்று எவரேனும் கருதினால் அது தவறானது. அதற்கு அப்பாலும் நோக்கங்கள் இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்த நன்கொடைப் பொதியுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திக்க சீனத் தூதுவர் சென்றிருந்த போது தான், இந்திய அதிகாரிகள் குழு மத்தள விமான நிலையம் தொடர்பாக, கொழும்பில் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்தது.

மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை இந்தியா கொள்வனவு செய்வதென்ற அடிப்படையில் இந்த பேச்சுக்கள் முன்னெடுக்கப் பட்டன.



இவ்வாறு இரண்டு நாடுகளும் பங்குகளைப் பிரித்துக் கொள்வதற்காக, மத்தல விமான நிலையத்தின் பெறுமதியை மதிப்பீடு செய்திருந்தன. இலங்கை அரசாங்கத்தின் மதிப்பீடுகளின் படி, மத்தள விமான நிலையத்தின் பெறுமதி 326 மில்லியன் டொலர் என்று பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க கூறியிருந்தார்.

இதன்படி பார்த்தால், 70 வீத பங்குகளுக்காக இந்தியா, 228 மில்லியன் டொலரை வழங்க வேண்டியிருக்கும்.

ஆனால், இந்திய விமான நிலைய அதிகாரசபை இந்த மதிப்பீட்டை ஏற்கவில்லை. அவர்களின் மதிப்பீட்டின் படி, விமான நிலை யத்தின் பெறுமதி 293 மில்லியன் டொலர் தான்.

இந்தப் பேச்சுக்கள் இன்னமும் நடந்து கொண்டிருக்கின்றன. இறுதியான முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இதற்கும், மத்தள தொடர்பாக எந்த திட்டத்தையும் ஆலோசிக்கவில்லை என்று வேறு இந்தியா மற்றொரு குண்டைத் தூக்கிப் போட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இங்கு, ஆச்சரியமான வகையில், ஒரு விடயம் இருக்கிறது. அதாவது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்ட 295 மில்லியன் டொலர் நன்கொடையும், இந்திய விமான நிலைய அதிகார சபையினால், மத்தள விமான நிலையத்தின் பெறுமதியாக மதிக்கப்பட்ட, 293 மில்லியன் டொலருடன் கிட்டத்தட்ட சமமாக இருக்கிறது.

அவ்வாறாயின், இந்த நன்கொடையைக் கொடுத்து, மத்தள விமான நிலையம் கைமாற்றப்படுவதைதடுப்பதற்கு சீனா எத்தனித்ததா –இன்னமும் எத்தனிக்கிறதா என்ற கேள்விகள் உள்ளன.

முன்னதாக, சீனா, மத்தள விமான நிலையத்துக்காகப் பெறப்பட்ட கடனுக்கான வட்டியை தள்ளுபடி செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கோ, வட்டித் தொகையை குறைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கோ செவி சாய்க்கவில்லை.

இந்த விவகாரத்தினால் சீன அதிகாரிகளுக்கும், நிதியமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில், பகிரங்க வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

ஆனால், இது வர்த்தககடன், இரண்டு நாடுகளும் இணங்கிப் பெற்ற கடன். அதில் எந்த தளர்வுக்கும் இடமில்லை. அவ்வாறு கேட்பதும் நியாயமில்லை என்று சீனா உதாசீனம் செய்திருந்தது.

இப்போது, சீனா மத்தல விமான நிலையத்தின் பெறுமதிக்கு இணையான நன்கொடையை வழங்க முன்வந்திருக்கிறது. அதுவும், ஜனாதிபதி விரும்பும் ஏதாவது ஒரு திட்டத்துக்கு அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஒரு தூண்டிலைப் போட்டிருக்கிறது.

இருந்தாலும், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அந்த நன்கொடையை மத்தள விமான நிலையத்துக்குப் பெறப் பட்ட கடனைத் தள்ளுபடி செய்வதற்காக பயன்படுத்தப் போகிறார் எனக் கூறவில்லை.

அதனை, வீடமைப்புத் திட்டம் ஒன்றுக்குப் பயன்படுத்த அவர் முடிவு செய்திருக்கிறார். இந்தக் கொடையை மத்தள விமான நிலையத்தின் கடனை அடைப்பதற்குப் பயன்படுத்தினால், எதுவும் தேறாது.

ஏனென்றால், மத்தள விமான நிலையம் இப்போதைக்கு வருமானம் தரும் ஒன்றாக மாறும் சாத்தியங்கள் இல்லை.

ஆனால், தலா 10 இலட்சம் ரூபாவில் வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டத்தில் இதனை முதலீடு செய்தால், 48,000 பேருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். அந்த வகையில், இது புத்திசாலித்தனமான முடிவு தான்.

ஆனால், இந்தியா இந்த நன்கொடையை குழப்பத்துடன் நோக்குகிறது. தனக்குப் போட்டியாக–இலங்கையை வளைத்துப் போடுவதற்கு சீனா தனது நிதியைப் பயன்படுத்திக் கொள்கிறது என்ற ஆதங்கம் இந்தியாவிடம் உருவாகியிருக்கிறது.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் சுமார் 5000 கி. மீ. இடைவெளி இருந்தாலும், அந்த இடைவெளியை சீனா தனது பணத்தைக் கொண்டு நிரப்புகிறது என்ற கருத்துப்பட புதுடெல்லி ஊடகம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

சீன ஜனாதிபதியின் இந்த மிகப் பெரிய நன்கொடை, இலங்கை எதிர்பாராதது. இதற்குப் பின்னால் என்ன பூதம் கிளம்பப் போகிறதோ என்ற குழப்பமும் அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அதேவேளை, மத்தள விவகாரத்தில் இந்தியாவும் குழப்பமான கருத்துக்களைத் தான் வெளிப்படுத்துகிறது. இந்த நிலையில் சீனாவின் மிகப்பெரிய கொடை அறிவிப்பு இந்தியாவுக்கு நிச்சயம் சவாலாகத் தான் இருக்கும்.

*



கட்டுரையாளர்
கேணல் ஹரிகரன்

காலைக்கதிர் Kālaikkathir



# தேர்தல் இழுபறி நிலை; ஆணையாளர் விளக்கம்

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனத்தின் 21ஆவது பிரிவில் 'ஜனநாயக நாடொன்றில் ஆட்சி அதிகாரம் மக்களின் விருப்பமாக அமைய வேண்டும். அந்த விருப்பமானது சரியான நேரத்தில் நடத்தப்படும். உண்மையான வாக்களிப்பின் ஊடாக தெரிவிக்கப்படவேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் தாமதமடைதல், தேர்தலை நீதியற்ற வகையில் நடத்துதல் போன்றன குற்றம் என இந்நாட்டின் தேர்தல்கள் ஆணைக்குழு பகிரங்கமா கவே குறிப்பிடுகின்றது. அவ்வாறான பின்புலத்தினுள் மாகாண சபைகளுக்கான தேர்தல் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பது தொடர்பில் குற்றம் சுமத்தப்படுவது தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கே யாகும். தேர்தல் நடத்தப்படுவதற்கான தாமதம் தொடர்பில் உண்மையான நிலையை அறிந்து கொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுடன் மேற்கொண்ட நேர்காணல் இது.**

கேள்வி:- தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அவர்களே! அடுத்து எந்த தேர்தல் நடத்தப்பட உள்ளது?

பதில் : - தற்போது கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளின் காலம் கடந்து போயிருக்கின்றது. ஒக்டோபர் மாதத்தில் மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடையவுள்ளது. இந்த ஆறு சபைகளினதும் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதாயின் நடத்துவதற்கான நெருங்கிய தினம் ஜனவரி 5ஆம் திகதியாகும். நாடாளுமன்றத்தின் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஜனவரி 12ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார்கள்.

தென் மற்றும் மேல் மாகாண சபைகளை உரிய காலத்திற்கு முன்னர் கலைத்தால் எட்டு மாகாண சபைக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் மாத்திரம் 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத்தில் முடிவடைகின்றது.

**கேள்வி:**- மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவது தேர்தல் ஆணைக் குழுவின் தலைவரே என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். புதிய முறையை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுமாயின் பழைய முறையில் ஏன் தேர்தலை நடத்த முடியாது?

பதில் -அவர் அவ்வாறு கூறியுள்ளமை தொடர்பில் என்னால் பதிலளிக்க முடியாது. எனினும் இவ்விடயத்தைத் தெளிவு படுத்தவேண்டியது முக்கியம்.

மாகாண சபைகள் தொடர்பில் உள்ள சட்டம் 1988ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் சட்டமாகும். அந்தச் சட்டத்தின் கீழ் 2017 ஒக்ரோபர் மாதத்தில் முடிவடைந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை காலம் முடிவடைந்த சில வாரங்களில் நடத்துவதற்கு நாம் ஆயத்தமானோம். அதனிடையே 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத் தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றிக் கொள்வதற்கு நாடாளுமன்றம் நடவடிக்கை மேற்கொண்டது. அந்த புதிய முறையின் கீழ் விகிதாசார முறைக்குப் பதிலாக கலப்பு விகிதாசார முறை மாற்றப்பட்டது.

இது சரியாக, முதல் வீட்டை உடைத்து விட்டு புதிய வீடொன்றைக் கட்டுவதைப் போன்றதாகும். குறைந்தது பழைய அத்திவாரம் கூட இல்லை. எனவே தற்போது மீண்டும் விகிதாசார முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின் 2017 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டி வரும்.


நாடாளுமன்றத்தின் சட்டத்தை நீக்கி விட்டு பழைய சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முடியுமாயின் நாம் அநேகமான விடயங்களை மாற்றி அமைப்போம்.

எம்மால் அவ்வாறு மாற்றங்களைச் செய்வதற்கு அதிகாரங்கள் இருக்குமாயின் தேர்தல் செலவு அறிக்கையைச் சமர்ப்பித்தல், செலவுகளை வரையறுத்தல், இளைஞர்களுக்கு கண்டிப்பான பிரதிநிதித்துவத்தை வழங்குதல், போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தாம் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்று சான்றிதழைக் கோருதல் போன்ற வற்றுக்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். எனினும் அவ்வாறு செய்வதற்கு எமக்கு அதிகாரங்கள் இல்லை.

முன்னாள் ஜனாதிபதியையோ வேறு அரசியல்வாதிகளையோ அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவதற்கான தேவை எமக்கில்லை. அவரது கருத்தை அவர் தெரிவித்திருக்கின்றார். எமது தெளிவை நாம் வழங்குகின்றோம்.

கேள்வி:- மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லையா?

பதில்:-கலாநிதி தவலிங்கத்தின் தலைமையில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பெப்ரவரி 14ஆம் திகதி



மாகாண சபை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. அமைச்சர் அதனை நாடாளுமன்றத் தில் சமர்ப்பித்தார். அது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டது. எனினும், இன்னனும் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த அறிக்கைக்கு அமைய நாடாளுமன்றத்தில் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

நாம் ஏப்ரல் மாதத்திலும், மே மற்றும் ஜூன் மாதங்களிலும் இது தொடர்பில் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்து மூன்று கடிதங்களை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளுக்கு அனுப்பினோம். இப்போது நாம் எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம். நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வைக்குமாறு சபாநாயகர் கூறியிருக்கின்றார்.

கேள்வி- நீங்கள் என்னதான் கூறினாலும் அரசியல்வாதிகள் விரலை நீட்டுகின்றமை தேர்தல் ஆணைக்குழுவிற்கேயாகும்?

பதில் : -அதனையிட்டு வேதனையாக உள்ளது.

கிரிக்கெட் போட்டி ஒன்று தோல்வியடைந்தால் துடுப்பாட்டக்காரரையும், பந்து வீச்சாளரையும் குற்றம் கூறுகின்றமையில் பலனில்லை. மொத்த அணியும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். அதே போன்று மொத்த நாடாளுமன்றமும் பொறுப்புக் கூற வேண்டும். அதே போன்று தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் தெரிவுகளில் மக்களுக்கும் இது பொறுப்புள்ளது. கேகாலை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களது கூட்டமைப்பினால் எனக்கு ஒரு நினைவூட்டல் வழங்கப்பட்டது. அது தவிர முகநூலில், தபால் அட்டைகள் மூலம் பேசுவதற்குப் புறம்பாக மக்களின் அக்கறையின்மையும் பிரச்சினையே.

கேள்வி:- பிரதான அரசியல் கட்சிகளைப் போன்று சில புதிய அரசியல் கட்சிகளிலிருந்தும், முக்கியமான நபர்கள் சிலரும் 2020ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றனர் எனப் பேச்சுக்கள் அடிபடுகின்றனவே. அவர்களிடையே மஹிந்த தேசப்பிரியவின் பெயரும் உள்ளதே....?



பதில்- தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டு மூன்றாவது கூட்டத்தின் போது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தில் இருந்தால் அவ்வாறானவர்கள் ஆணைக்குழுவிலிருந்து வெளியேறி குறைந்தது இரண்டு வருடங்களுக்குப் பின்னரே தேர்தலில் போட்டியிட முடியும் என நான் பிரேரணை ஒன்றை முன்வைத்தேன். எமது அதிகாரிகளுக்கும் நாம் இது தொடர்பில் கூறி யிருக்கின் றோம். எவரேனும் ஒருவர் தேர்தலில் போட்டியிட விரும்புவாறானால் அவ் வாறானவர்கள் கால தாமதமின்றி ஆணைக்குழுவிலிருந்து விலகி விட வேண்டும் என்று அறிவித்திருக்கின்றேன்.

தமது உறவினர் ஒருவர் பஸ்ஸில் ஏறும் வரை பஸ்ஸை நிறுத்தி வைத்துக் கொண்டிருப்பதற்கு எதிர்ப்பைக் காட்டும் நாம், எமது அழுத்தங்கள் இருக்கும் போது தேர்தலைக் கேட்பது சரியானதா?

இந்தியாவின் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் டி. என். ஷேஷ தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். பிரதான தேர்தல் ஆணையாளராக இருந்த கலாநிதி கில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சரவை அமைச்சரானார். எனினும் அவ்வாறான நிலை நல்லதல்ல.



அறுபதாம் ஆண்டு காலப்பகுதியிலி ருந்து எமது குடும்பம் அரசியல் தொடர்புகளைக் கொண்டிருந்த குடும்பம். அரசியல் எனக்கு விளங்கக் கூடிய ஒரு விடயம். எனினும் நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.

வெற்றியடைவது, தோற்றுப் போவது என்பது வேறு விடயங்கள். அவற்றை விட சுய கௌரவம் மற்றும் மனச்சாட்சி போன்றன மிகவும் முக்கியனவையாகும்.

கேள்வி- அரச நிறுவனம் ஒன்று புதிய ஊடகப் பயன்பாட்டால் மக்களோடு நேரடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் இந்த நூற்றாண்டில் முன்மாதிரியாக ஆகியிருப்பது தேர்தல் ஆணைக்குழு வாகும். அவ்வாறான தேர்தல் ஆணைக் குழுவின் சமூக வலைத் தளச் செயற்பாடு களை பலவீனமாக்கு வதற்கான நிலை உள்ளதா?

பதில்- தேர்தல்கள் ஆணைக்குழு சமூக வலைத்தள பயனாளர்களுடன் மேற்கொள்ளும் தொடர்புகளை ஒரு போதும் நிறுத்தப் போவதில்லை. இன்றும் வாக்காளர்களைக் கணக்கிடுவதற்கு ஒன்லைன் மயப்படுத்துவது தொடர்பில் பேச்சு இடம்பெற்றது.

அதே போன்று எம்மோடு இணைந்துள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சமூக வலைத்தள பயனாளர்களுடனும் இணைந்து செயற்பட்டுக் கொண்டு செல்கின்றோம்.

நான் தனிப்பட்ட முறையில் மேற் கொள்ளும் செயற்பாடுக ளைச் சற்றுக் குறைத்துள்ளேன். தேர்தல் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ கணக்கின் ஊடான தொடர்பாடல் நடவடிக்கைகளை செயற்திறன்மிக்கதாக முன்னெடுத்துச் செல்கின்றோம். எனினும் எனது நண்பர்களுடன் இருக்கும் சமூக வலைத்தளத் தொடர்புகள் அவ்வாறே வைத்துக் கொள்கின்றேன்.

வாக்காளர்களுக்கு வழங்குவதற்கான செய்தி ஒன்று என்னிடமுள்ளது. அதற்கும் இடம் தாருங்கள்

அனைவரும் தமது பெயர்களை வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்து கிராம உத்தியோகத்தர் ஊடாக தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இதுவரை உங்களுக்கு வாக்காளர் விண்ணபப்படிவங்கள் கிடைக்கா விட்டால் தேர்தல்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

ஓகஸ்ட் 10ஆம் திகதிக்குப் பின்னர் முறையீடுகள் மூலம் மாத்திரமே வாக்காளர் உரிமை கோர முடியும். 2019 ஜனவரி 8ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதியால் முடியும். அவ்வாறு நடந்தால் இந்த வாக்காளர் பட்டியல் மூலமாகத்தான் தேர்தல் நடத்தப்படும். நீங்கள் ஜனநாய கத்தை விரும்புபவர்களாயின் அதன் நடைமுறை வெளிப்பாடான வாக்களிப்புக் காக உங்களுக்கு இருக்கும் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**மூலம் - மஞ்சுல சமரசேகர**
**தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்**

# அறியாத உயிர்களும் அற்புத அறிவியலும்

## 'தும்பிக்கை' விலங்குகள்!

யானையைப் போன்ற தோற்றம் கொண்ட, அதாவது யானையின் தும்பிக்கையைப் போன்ற அமைப்புடைய சிலவகை அரிய உயிரினங்கள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்வோம்.

**பினாச்சியோ தவளை அல்லது யானை மூக்கு தவளை**



2010ம் ஆண்டுதான் இந்தத்தவளை கண்ட றியப்பட்டிருக்கிறது. இந்தோனேஷியாவின் ரிமோட் பிரதேசமான ஃப்யூஜா மலைப்பகுதியில் ஒரு ஆராய்ச் சிக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்த அரிசி மூட்டை யின் மேல் அமர்ந்திருந்த இந்த தவளை அதன் பிறகு உலகின் வேறெந்த மூலையிலும் இதுவரையி லும் கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக் கது.

மரத்தவளை வகையைச் சேர்ந்த இதற்கு, இதனு டைய மூக்கின் அமைப்பைப் பொறுத்தே இப்படியொரு பெயர் அமைந்திருக்கிறது.

**பினாச்சியோ லிசார்டு**



அனோலிஸ் ப்ரோபோசிஸ் எனப்படும் இந்த நீண்டமூக்கு உயிரினம் சிறியவகை பல்லி இனத் தைச்சேர்ந்தது.

1953ம் வருடம் ஈகுவடார் பகுதிகளில் கண்டறியப் பட்ட இந்த பல்லி 1960க்கு பிறகு எவர் கண்ணிலும் படவில்லை என்றாலும் பலவருடங்களுக்குப்பிறகு 2005ம் ஆண்டு இவை மீண்டும் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன என்பது சுவாரசியம்தான்...

2005லிருந்து 2013வரை இவை மூன்றுமுறை தான் கண்ணுக்கு தட்டுப்பட்டிருப்பதாக அதிகாரப் பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் பினாச்சியோ மூக்கின் காரணமாக இதுவும் கண்டிப்பாக நாம் இந்தப்பதிவில் படிக்கவேண்டிய ஒன்றுதான்!

**யானை வீவில்...**



வீவில் என்பது செடிகள் மற்றும் சேமிக்கப்பட்ட தானியங்களில் இருந்துகொண்டு அவற்றை உண் ணும் ஒருவகைப்பூச்சி இனம்.

பெரும்பாலும் எல்லா வகை வீவிலும் யானை தும்பிக்கை போன்ற மூக்கு மற்றும் வாயமைப்பை உடையவைதான் என்றாலும், Orthorhinus cylindrirostris என்றழைக்கப்படும் இந்தவகை வீவில் மட்டும்தான் இதன் தோற்றத்தின் அடிப்படையில் யானை வீவில் என்றும் அறிவியலால் அழைக்கப் படுகிறது.

ஆஸ்திரேலியாவில் ஒயின் கம்பெனிகளுக்கு சரி யான சவாலாக விளங்கும் இந்த வீவில் சராசரியாக 10mm முதல் 20mm வரை வளரக்கூடியது என்றா லும், இதில் பெண் வீவிலைவிட ஆண் வீவிலுக்கு தும்பிக்கை போன்ற முன்பாகமும், முன்னங்கால் களும் நீளம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமைக்காமல் சாப்பிடவே கூடாது

சில வகை உணவுகள் பச்சையாக உண்ணும் போது உடல் ஆரோக்கியத்தில் சில பாதிப்புகள் தோன்றும். மனித உடல் ஆரோக்கியம் என்பது விலைமதிப்பற்றது. ஆகவே, நாம் ஆரோக்கிய மாக இருப்பதற்காக சில பழக்கங்களை தவிர்க்க வேண்டுமாயின், அவற்றை தவிர்த்து விடுவது நல்லது. இதனால் நமது ஆரோக்கியம் பாதுகாக்கப் படுகிறது.

**உருளைகிழங்கு:**



உருளைக்கிழங்கு என்பது பிரபலமான ஒரு உணவு வகை. இதனை பயன்படுத்தி பல உணவு பதார்த்தங்கள் சமைக்கப் படுகின்றன. உருளைக் கிழங்கை பச்சையாக உண்ணுவதால் வாய்வு பிரச்சினை உண்டாகிறது. செரிமானக் கோளாறு, தலைவலி, குமட்டல், போன்றவை உண்டாகின் றன. இதற்கு காரணம், பச்சை உருளைகிழங்கில் இருக் கும் சொலனின் என்னும் நச்சுப்பொருள். வேக வைக்கும்போதும், சமைக்கும்போது நச்சு பொருள் வெளியேறி உண்ணுவதற்கு ஏற்ற வகை உண வாக இது மாற்றம் பெறுகிறது.

**பால்**



தேனை போல், பாலையும் இன்று கடைகளில் தான் நாம் வாங்குகிறோம். ஆகவே கடையில் வாங்கும் பால் பொதுவாக பதப்படுத்தி தான் விற் கப்படுகிறது. ஆகவே இவற்றை வாங்கி, காய்ச்சி பருகி வருவது உடலுக்கு ஆரோக்கியத்தை தரும். இன்று பலர் பால் அல்லது பசும்பாலை நேரடியாக வாங்கி பயன்படுத்துகின்றனர். அப்படி பட்டவர்கள், பச்சை பாலைப் பயன்படுத்துவது தீங்கு விளை விக்கும். காய்ச்சாத பசும்பாலில், நுண் கிருமிகள், ஈ கோலி, சல்மோனெல்லா போன்றவை இருக்கும். இவை மனித உடலுக்கு பல்வேறு ஆரோக்கிய கேடுகளை உண்டாக்குகிறது. அதனால் பசும் பாலை வாங்கி பயன்படுத்துகிறவர்கள் கட்டாயம் காய்ச்சி பருகுவது அவசியம்.

**காளான்**



தற்போது மஷ்ரூம் எனப்படும் காளான் பலராலும் விரும்பிச் சுவைக்கப்படும் உணவாக உள்ளது. காளானை பயன்படுத்தி பல்வேறு சுவைமிகு உணவுகளை நாம் தயாரிக்கலாம். சமைத்து உண்ணும்போது பாதுகாப்பானதாக இருக்கும் காளான், பச்சையாக உண்ணும்போது பல பாதிப்புகளை உண்டாக்குகிறது. காளான் என்பது ஒரு பூஞ்சை வகை என்பதால் இவற்றில் நுண் கிருமிகள் அதிகமாக இருக்கும். ஆகவே இவற்றை சமைக்காமல் உட்கொள்ளும்போது பல்வேறு செரிமான கோளாறுகள் உண்டாகும் வாய்ப்புகள் உண்டு.

**பன்றி இறைச்சி**



நம்மில் பலர் இறைச்சி வகைகளை சமைக்காமல் உண்ணுவது கிடையாது. ஆனால் சில மக்கள் பன்றி இறைச்சி அல்லது வேறு இறைச்சியை சாலடில் சேர்த்து பச்சையாக உண்ணுவர். இந்த பழக்கம் முற்றிலும் ஆபத்தானது. பன்றி இறைச்சி பச்சையாக இருக்கும்போது அதில் நாடாப் புழுக்கள் இருக்கும். இந்த வகை புழு, மனித உடலுக்கு பல தீங்குகளை உண் டாக்கும். உணவு நஞ்சாதல் அல்லது ஆபத் தான பல்வேறு சிக்கல்கள் சில சமயம் இறப்பையும் இவை உண்டாக்கலாம். ஆகவே பன்றி இறைச்சியைக் கண்டிப்பாக பச்சையாக உண்ணக்கூடாது.வேக வைத்து மட்டுமே உண்ண வேண்டும்.

**முட்டை**



எல்லா மக்களாலும் விரும்பி உண்ணப் படும் உணவு பொருள் , முட்டை. பொது வாக இதனை பெரும்பாலும் வேக வைத்து பயன்படுத்துவர். சில வகை உணவில், மஞ்சள் கருவை மட்டும் பச்சையாக பயன் படுத்தும் பழக்கத்தை சிலர் கொண்டிருப்பர். இதற்கு காரணம் இதன் சுவை தனித்துவ மாக இருக்கும். இந்த பழக்கம் பல ஆரோக் கிய பிரச்சனைகளை கொடுக்கும். மஞ்சள் கருவை வேக வைக்காமல் பயன்படுத் தும் போது அவற்றில் சல்மோனெல்லா அல்லது வேறு பாக்டீரியா போன்றவை வெளியேறி, பல நோய்களை உண்டாக் கும்.

# விநோத தகவல்கள்

* வித்தை காட்ட பயன்படும் குரங்குக்கு 'பரட் டைத் தலை குரங்கு' என்று பெயர்.
* ஒரு யுகம் என்பது 43, 20, 000 ஆண்டு களாகும்.
* வளர்பிறை கோடுகள் மேல் நோக்கியும், தேய்பிறை கோடுகள் கீழ்நோக்கியும் இருக்கும்.
* கண்ணீர்புகை குண்டு, குதிரைக்கு எவ்வித விளைவையும் ஏற்படுத்தாது.
* கிறிஸ்தவர்களின் போப் ஆண்டவர் மூன்று மகுடங்களை அணிந்திருப்பார்.
* எலிக்கும், முயலுக்கும் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும்.
* O குரூப் ரத்தம் உடையவர்களை 'யுனிவர்சல் டோனர்' என்பர்.
* பாகிஸ்தான் – சீனா நாடுகளுக்கு இடையே உள்ள மலைத்தொடர் 'காரகோரம்'
* அதி உயர விமானப் போர்ப் பயிற்சிப் பள்ளி காஷ்மீர் மாநிலம் 'குல்மார்க்' இல் உள்ளது.
* நெப்போலியன்– 'Man of Destiney என்று அழைக்கப்படுவார்.
* குருவியின் கழுத்திலுள்ள எழும்புகள் 23.
* வரிக்குதிரையின் ஆயுட்காலம் 22 வருடங்கள்
* அணிலின் ஆயுட்காலம் 82 வருடங்கள்.
* செம்மறி ஆட்டின் ஆயுட்காலம் 16 வருடங்கள்.
* சிம்பன்சியின் ஆயுட்காலம் 41 வருடங்கள்.
* பெருங்கரடியின் ஆயுட்காலம் 20 வருடங்கள்.
* தீக்கோழியின் ஆயுட்காலம் 50 வருடங்கள்.
* பென்குயினின் ஆயுட்காலம் 22 வருடங்கள்.
* திமிங்கிலத்தின் ஆயுட்காலம் 30 முதல் 40 வருடங்கள்
* கடலாமையின் ஆயுட்காலம் 200 வருடங் கள்
* மூக்கில் பல் உள்ள விலங்கு முதலை.
* பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் விலங்கு ஒட்டகம்
* ஈருடகவாழிகள் ஆமை, தவளை, முதளை
* பறக்க முடியாத பறவைகள் கிவி, ஏமு,பெஸ் பரோ, தீக்கோழி, பென் குயின்
* தோலில் நச்சுச் சுரப்பிகள் உள்ள விலங்கு தேரை.

# சு.கவுடனான உறவை முறிக்கவேண்டி வரும்



## சுசில் பிரேமஜயந்த எச்சரிக்கை

கொழும்பு, ஓக 03

ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவாடும் சுதந்திரக் கட்சியுடன் பயணிக்க முடியாதுள்ளது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான உறவையும் முறிக்க வேண்டிய நிலையில் இன்று அவர்கள் செயற்படுகின்றனர் என கூட்டு எதிரணி உறுப்பினராக அடையாளப்படுத்தும் சுயாதீன அணியின் உறுப்பினர் சுசில்பிரேமஜயந்த தெரிவித்தார்.

மஹிந்த யாரை எதிர்க்கட்சித் தலைவராக்குகின்றாரோ அவருடன் இணைந்து ஆட்சியை வீழ்த்தும் முயற்சிகளை முன்னெடுப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டு எதிரணியின் செயற்பாடுகள் மற்றும் எதிர்க்கட்சியாக செயற்படும் முயற்சிகள் குறித்து வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாக நாம் இணைந்து தனி அரசை அமைக்கவேண்டும் எனக்கடந்த மூன்று ஆண்டுகளாக முயற்சிகளை எடுத்தோம். எனினும் கடந்த மூன்று ஆண்டுகளில் 16 பேரை மாத்திரமே எம்முடன் இணைக்க முடிந்துள்ளது. இப்போதுள்ள நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இடையில் விரிசல் நிலைமையே ஏற்பட்டு வருகின்றது. அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் இனிமேலும் எம்முடன் இணைவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். ஆகவே அவர்களுக்கு இனியும் நிலைமைகளை எடுத்துரைக்க முடியாது என்பதே எமது நிலைப்பாடு. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்கும்வரையில்எம்மால்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகப் பயணிக்க முடியாது.

நாம் 70 பேர் கொண்ட பலமான சக்தியாக உள்ளோம். இந்த அரசு கலையும் வரையில் நாம் எதிர்க்கட்சியாகச் செயற்பட தீர்மானம் எடுத்துள்ளோம். அதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். சபாநாயகரைச் சந்தித்து எமது நியாயங்களை எடுத்துரைத்து எழுத்து மூலக் கோரிக்கையையும் முன்வைத்துள்ளோம். அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளின்போது எமது கோரிக்கைக்கான பதிலைச் சபாநாயகர் முன்வைப்பார். எவ்வாறு இருப்பினும் எமது 70 பேர் கொண்ட அணியே எதிர்க்கட்சியாக செயற்படும். எம்மில் யார் எதிர்க்கட்சித் தலைவர் என்பதையும் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானிப்பார். அவர் யாரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கின்றாரோ அவரையே நாமும் ஏற்றுக்கொள்வோம்.

நாம் அனைவரும் பொதுவான நோக்கத்தில் அரசியல் அணியாக ஒன்றிணைந்துள்ள நிலையில் எமக்குள் அதிகார போட்டி இல்லை. அனைவரும் இணைந்து அடுத்து அரசை அமைக்கவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே உள்ளது. மீண்டும் மஹிந்த தலைமையில் பலமான அரசை அமைக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை வீழ்த்த வேண்டும். அதற்காக எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

அதேபோல்எமது அணியினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டிக்கொண்டு அரசியல் செய்ய நினைத்தால் அதன் பின்னர் அவர்களுக்கும் அரசியல் வாழ்க்கை இல்லாது போய்விடும். மக்கள் நிலைப்பாடு என்ன என்பதை உணர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் செயற்பட வேண்டும் –என்றார்.

## உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

திருமலை, ஓக 03

திருகோணமலை–உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காயத்திரி அம்மன் ஆலயத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலத்தின் முழங்கால்கள் மடக்கப்பட்டு, உருக்குலைந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 60 – 70 வயது மதிக்கத்தக்கவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 10 அடி தூரத்தில் செருப்பும், 30 அடி தூரத்தில் கைக்குட்டை மற்றும் மேலாடையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலாடையில் திருகோணமலையில் இருந்து கண்ணியாவுக்குச் சென்ற பஸ் ரிக்கெட் ஒன்றும் காணப்பட்டுள்ளது

## விபத்துகளால் ஒரு நாளில் சராசரி 8 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக 03

கடந்த ஆண்டில் வீதி விபத்துக்களால் சராசரியாக ஒரு நாளைக்கு 8 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாரின் தகவல் படி, 2017ஆம் ஆண்டில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் ஒரு நாளைக்கு 12 பேர் காயங்களுக்குள்ளாகி உள்ளனர் எனப் பொலிஸ் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு, வீதிப் பாதுகாப்பு மற்றும் அதிவேகப் பாதை சுற்றுலாப்பிரிவுப் பணிப்பாளர் பொலிஸ் அதிகாரி இந்திக ஹப்புகொட தெரிவித்தார்.

இதேவேளை, 2016ஆம் ஆண்டில் 2,798 அபாயகர விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 2017இல் அபாயகர விபத்துக்கள் 2,922 ஆக அதிகரித்துள்ளன. அதன்படி 2016 இல் 2,961பேரும் 2017இல் 3,100 பேரும் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இடம்பெற்ற அபாயகரமான விபத்துக்களுள் மரணித்தவர்களின் எண்ணிக்கை 1,514 ஆக உள்ளதாகப் பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## இன்று வேலை நிறுத்தம் மருத்துவர் சங்கம் உறுதி

கொழும்பு, ஓக 03

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ள நாடு தழுவிய வேலை நிறுத்தம் இன்று காலை 08 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வேலைநிறுத்தம் மேற்கொள்வதற்கான 10 காரணங்கள் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

எனினும் அந்தக் கோரிக்கைகள் தொடர்பில்நியாயமானகரிசனை கட்டப்படாததால் இந்த வேலைநிறுத்தம் உறுதியாகியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8 மணி முதல் 24 மணி நேரங்களுக்கு இந்த வேலை நிறுத்தம் இடம்பெறவுள்ளது. எனினும், அனைத்து வைத்திய சாலைகளிலும் அவசர சிகிச்சை சேவைகள் தடையின்றி நடைபெறும் எனவும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சபாநாயகருக்கு எதிராகப் பிரேரணை முன்வைத்தால் முகங்கொடுக்க தயார்

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஓக 03

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிரணி கொண்டு வந்தால், அந்த பிரேரணைக்கு முகங் கொடுப்பதற்கு நாம் தயாராக உள்ளோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் அமைச்சருமான ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர பார்க்கின்றனர். எதிர்க்கட்சி தலைவர் பதவியைக் கூட்டு எதிரணி கோரட்டும். அதில் எமக்கு பிரச்சினையில்லை. எனினும் ஏற்கனவே எதிர்க்கட்சி தலைவர் ஒருவர் உள்ளார். அதில் எந்தவொரு மாற்றமும் வராது.

ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் உள்ளனர். இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எப்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்குவது.

மேலும் எக்காரணம் கொண்டும் கருஜயசூரியவை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்குவதற்கு இடமளிக்கமாட்டோம் – என்றார். (ஐ)

## புதிய கிரிக்கெட் மைதானம் மாணவர்களிடம் கையளிப்பு



கொழும்பு, ஓக 03

பொலனறுவை றோயல்கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதி மாணவர்களிடம் கையளித்தார்.

பொலனறுவை மாவட்ட மக்களுக்கு அபிவிருத்தியின் அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி வழிகாட்டுதலில் நடைமுறைப்படுத்தப்படும் எழுச்சிபெறும் பொலனறுவை மாவட்ட அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 8 கோடி ரூபா செலவில் இந்த விளையாட்டு மைதானம் பொலனறுவை றோயல் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டை நகரத்திலிருந்து கிராமத்திற்குக் கொண்டு செல்லும் முயற்சியில் முதற்படியாக அமைக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டு மைதானம், நகர பிரதேசங்களில் வாழும் சிறார்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

கடந்த காலத்தில் றோயல் கல்லூரி மாணவர்கள் கிரிக்கெட் விளையாட்டில் திறமைகளை வெளிப்படுத்தியதுடன், எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை உருவாக்கும் களமாக இந்த விளையாட்டு மைதானம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வித்தியாலயத்திற்கு வருகைத் தந்த ஜனாதிபதியை மாணவர்கள் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றதுடன், தேசிய மாணவர் படையணியின் அணிவகுப்பு மரியாதையும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

செவனப்பிட்டிய மகா வித்தியாலயம் உள்ளிட்ட பொலனறுவை மாவட்டத்தின் 04 பாடசாலைகளுக்கு கிரிக்கெட் விளையாட்டு உபகரணத்தொகுதிகளையும் ஜனாதிபதி இதன்போது வழங்கிவைத்தார்.

றோயல்கல்லூரிமாணவர்களால் ஜனாதிபதிக்கு விசேட நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

வடமத்திய மாகாண ஆளுநர் எம்.பீ. ஜயசிங்க, பிரதி அமைச்சர்கள் அஜித் மான்னம்பெரும, திலங்க சுமதிபால மற்றும் அதிபர் ஐ.கே.கே. ரவிலால் விஜேவங்ஸ, பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது சிம்பாப்வே தேர்தல்

## ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்



பிரஸ்ஸல்ஸ், ஒக 03

சிம்பாப்வே தேர்தலில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஊடகங்களின் மாறுபட்ட நிலைப்பாடு, வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் தேர்தல் ஆணையகத்தின் மீதான அவநம்பிக்கை என பல குளறுபடிகள் நிறைந்து காணப்பட்டதாக அந்தக் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் எல்மர் புரோக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரையில் நம்பகத்தன்மை என்பது மிகவும் முக்கியமானது. தேர்தல் தினத்தன்று எந்தவித வன்முறைகளும் இடம்பெறவில்லை. எனினும், பலவாக்குச்சாவடிகளுக்கு வெளியில் வாக்காளர்கள் பலர் அச்சுறுத்தப்பட்டனர். ஆளுங்கட்சியினராலேயே இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மிகவும் மோசமான சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. வாக்குச்சீட்டுகளின் மாதிரிகள் அச்சிடப்பட்டன. வாக்காளர்களைச் சிலர் கட்டுப்படுத்தி வந்தனர். ஊடகங்களும் தமது பங்கைச் சரியாகச் செய்யவில்லை. ஆளுங்கட்சிக்கு சார்பாகவே அரச ஊடகங்கள் செயற்பட்டன. தேர்தல் முடிவை வெளியிடுவதற்கு தேர்தல் ஆணையகம் தாமதித்தது. இதற்கான காரணம் குறித்து கேள்வியெழுப்ப வேண்டியுள்ளது. இந்நிலையில், தேர்தல் முடிவு எவ்வாறான நம்பகத்தன்மையை ஏற்படுத்துமென கூற முடியாது –என்றார்.

சிம்பாப்வே தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் கடந்த 2002ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதல் தடவையாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் பணியாற்றியுள்ளனர். சர்வதேச முதலீடுகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்னடைவை சந்தித்துள்ள சிம்பாப்வேயிற்கு, இத்தேர்தலின் ஊடாக அதற்கான வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் காணப்பட்டது.

எனினும், தற்போதைய சூழ்நிலை இதற்கு வழிவகுக்குமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். (ஐ)

# போரில் உயிர் நீத்த படையினர் நினைவு நிகழ்வு கொரியாவில்

சியோல், ஒக 03

கொரியப் போரில் வீர மரணம் எய்திய இராணுவ வீரர்களை நினைவுகூரும் நிகழ்வில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் கலந்து கொண்டுள்ளார்.

தென்கொரியாவில் இடம்பெற்ற இந்நினைவு நிகழ்வில் நேற்று முன் தினம் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் கலந்துகொண்டிருந்தார்.

இந்த நிகழ்வின்போது, போரில் வீர மரணம் எய்திய அமரிக்க இராணுவ வீரர்களின் எச்சங்கள் அமெரிக்கத் துணை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

அதனைத் தொடாந்து மைக் பென்ஸ் உரையாற்றுகையில், இன்று எங்கள் வீரர்கள் தமது தாய்நாட்டிற்குத் திரும்புகிறார்கள். இராணுவ வீரர்களின் எச்சங்களைக் கொண்டுள்ள பெட்டகங்கள், 1950 தொடக்கம் 1953 வரை இடம்பெற்ற கொரிய யுத்தத்தில் காணாமற் போன வீரர்களை நினைவுபடுத்துவது மட்டுமன்றி நம்பிக்கைக்குரிய வட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன்னின் வாக்குறுதியினையும் நினைவுபடுத்துகின்றன.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன்னின் வாக்குறுதியை பேணும் பண்பிற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிச்சயம் நன்றிக்குரியராக இருப்பார் என அமெரிக்க துணை ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். (ஐ)

# அமெரிக்காவில் மீண்டும் காட்டுத் தீ; 8 பேர் சாவு

கலிபோர்னியா, ஒக 03

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடந்த புதன்கிழமை மீண்டும் காட்டுத் தீ ஏற்பட்டது. இதில் 8 பேர் உயிரிழந்தனர். 60 வீடுகளும் எரிந்து சாம்பலாயின.

கோடை வெப்பம் அதிகரித்துள்ள வடக்கு கலிபோர்னியாவில் அண்மை காலமாகக் காட்டுத் தீ ஏற்படுவது அதிகரித்து வருகிறது. இந்நிலையில், சான் பிரான்சிஸ்கோ நகரில் இருந்து சுமார் 290 கி.மீ. தொலைவில் உள்ள வனப் பகுதியில் செவ்வாய்க்கிழமை மீண்டும் காட்டுத்தீ ஏற்பட்டது. அங்கு கடந்த வாரம் ஏற்கெனவே காட்டுத் தீ பரவியதால் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், அவற்றையும் மீறி தீ வேகமாகப் பரவியது.

ஹெலிகள் மூலம் இரசாயனத்தை தூவித் தீயை அணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும், புகை மூட்டமும், வெப்பமும் அதிகம் உள்ள இடங்களில் ஹெலிகொப்டரை செலுத்த முடியாமல் ராணுவ வீரர்கள் திணறினர். தீயில் சிக்கி இதுவரை 8 பேர் வரை இறந்துவிட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வனப் பகுதியை ஒட்டி அமைந்திருந்த சுமார் 60 வீடுகளும் தீக்கிரையாகிவிட்டன.

சுமார் 4 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு காட்டுத் தீ பரவியுள்ளது. வனப் பகுதியை ஒட்டிய பகுதிகளில் வசித்து வந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டதால் பெருமளவிலான உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளன.

# சிம்பாப்வேயில் வன்முறைகள்: துப்பாக்கிச்சூட்டில் மூவர் சாவு!





ஹராரே, ஒக 03

சிம்பாப்வேயின் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் கலவரமாக மாறியதைத் தொடர்ந்து, இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மூவர் உயிரிழந்தனர்.

சிம்பாப்வே தேர்தலை ஆளுங்கட்சி முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டதாக தெரிவித்து, எதிர்க்கட்சியினர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை தலைநகர் ஹராரேயில் பாரிய போராட்டங்களை முன்னெடுத்தனர். இதன்போது ரயர்களை எரித்து வீதிகளை மறித்து கோங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தை கலைக்கப் பொலிஸார் தண்ணீர் மற்றும் கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்தனர். இதன்போது பொலிஸாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதலில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர். இதன்போது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்தின் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர். சம்பவத்தின் போது ஹராரே வான்பரப்பில் சிம்பாப்வே இராணுவத்தின் ஹெலிகொப்டரும் பறந்தவண்ணமிருந்துள்ளது.

இந்நிலையில், முழுமையான தேர்தல் முடிவு வெளியாகும் வரை மக்களை பொறுமை காக்குமாறு ஜனாதிபதி மனங்வாவா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய மைக்கு எதிர்க்கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இராணுவம் தமது எல்லையை மீறிச் செயற்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் நெல்சன் சமிஸா சாடியுள்ளார்.

சுதந்திர சிம்பாப்வேயில் முகாபேயிற்கு அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் ஜனநாயக வாக்கெடுப்பு கடந்த திங்கட்கிழமை மிகவும் சமூகமாக இடம்பெற்றது.

இதுவரை வெளியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தற்போதைய ஜனாதிபதி எமர்சனே வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று தொகுதிகளுக்கான தேர்தல் இன்னும் வெளியாகவில்லை.

இதேவேளை, உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் இன்று வெளியிடப்படுமெனத் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் பிரசாரங்களுக்கு நாங்கள் அடிபணியவே மாட்டோம்

ஈரானின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியை முடக்குவதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் புதிய பிரசாரங்களுக்கு தமது நாடு ஒருபோதும் அடிபணியாதென ஜனாதிபதி ஹசன் ரௌஹானி கூறியுள்ளார்.

ஈரான் மீது பொருளாதார தடைகளை விதித்து வரும் அமெரிக்கா, அச்சுறுத்தும் வகையிலான கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றது. இந்நிலையில், இப்பிரசாரங்களுக்கு தமது நாடு அடிபணியாதென ஈரான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முரண்பாடுகள் உச்சத்தை அடைந்துள்ள நிலையில் ஈரான் ஜனாதிபதியை நிச்சயமாக சந்திப்பேன் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

எனினும், ட்ரம்பின் அழைப்பை



ஈரான் ஜனாதிபதி அறிவிப்பு

ஈரானின் மூத்த இராணுவ அதிகாரிகள் நிராகரித்துள்ளதுடன், ட்ரம்பின் சொல்லும் செயலும் முரணானதென்றும் விமர்சித்துள்ளனர்.

பராக் ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுடன் ஈரான் அணு சக்தி ஒப்பந்தத்தை செய்துகொண்டது. அதற்கமைய அணு சக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு மாத்திரமே பயன்படுத்துவதாக ஈரான் உறுதியளித்தது.

இதனை ஏற்று, அந்த நாட்டின் மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதித்திருந்த பல்வேறு பொருளாதாரத் தடைகளும் நீக்கப்பட்டன.

ஆனால் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர், ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பொருத்தமற்றதென தெரிவித்து குறித்த ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. அதனைத் தொடர்ந்து, ஈரானிடம் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்ய வேண்டாமெனத் தமது நேச நாடுகளுக்கும் அமெரிக்கா தெரிவித்து வந்தது.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான கருத்து மோதல்கள் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# துருக்கி மீது அமெ. பொருளாதார தடை



நியூயோர்க், ஒக 03

அமெரிக்க பாஸ்டரைத் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதைக்காரணம் காட்டி துருக்கி நீதி மற்றும் உள்துறை அமைச்சர்கள் மீது பொருளாதார தடை விதித்துள்ளது அமெரிக்கா. வடக்கு கரோலினாவை சேர்ந்த சுவிசே அறிவிப்பாளரான ஆண்ட்ரியூ ப்ருண்சன் அரசியல் குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்று குற்றஞ்சாட்டி கடந்து இரண்டு ஆண்டுகளாக அவரை சிறையில் வைத்திருக்கிறது துருக்கி. ஆனால், அவர் நிரபராதி என்கிறது அமெரிக்கா. (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir



# நாற்காலியில் அமர்ந்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி



சென்னை, ஓக 03

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நிலை தேறிவரும் நிலையில், நாற்காலியில் அமரவைக்கப்பட்டுள்ளார்.

காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கருணாநிதி, நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு கதிரையில் இருத்தப்பட்டுள்ளார்.

முதலில் வைத்தியர்கள் அவரைப் படுக்கையிலிருந்து எழுப்பி சிறிது சாய்ந்தவாறே உட்கார வைத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து அவர் நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டார்.

இது குறித்து வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் கூறுவதாவது,

கருணாநிதி உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. அவரைச் சிறிது நேரம் நாற்காலியில் அமர வைத்துப் பயிற்சி அளித்தனர். மருந்துகளை ஏற்றுக் கொண்டு உடல்நிலை ஒத்துழைப்பு அளிக்கிறது.

கருணாநிதி செயற்கை சுவாசம் இல்லாமல் தானாகவே சுவாசிக்கிறார். தேவைப்படும் போது மட்டுமே செயற்கை சுவாசம் அளிக்கப்படுகிறது. திரவ உணவு குழாய் வழியாக செலுத்தப்படுகிறது - எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள கருணாநிதியை பல்வேறு அரச தரப்பினரும் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

எனினும் அனைவரும் அவர் நலமாக உள்ளார். மீண்டும் அவர் உடல் நலம் தேறி மக்களுக்குச் சேவையாற்றுவார் எனத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், கருணாநிதியின் உடல் நலம் சீராகி வருவதாக அவரின் மகனும், தி.மு.க. செயல் தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளதோடு, கருணாநிதி நாற்காலியில் அமரவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'ஜெ' குளிர்பானம் குடிக்கும் காணொளி உண்மையானது

## தினகரனின் ஆதரவாளர் விளக்கம்



சென்னை, ஓக 03

ஜெயலலிதா குளிர்பானம் குடிக்கும் காணொளி உண்மையானது என, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி. தினகரனின் ஆதரவாளர் வெற்றிவேல் விளக்கமளித்துள்ளார்.

ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி, விசாரணை ஆணையகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை ஆஜராகி விளக்கமளித்தார். இதன்போதே மேற்படி தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ஜெயலலிதா குளிர்பானம் குடிக்கும் வீடியோ வெளியிடப்பட்டு 9 மாதம் ஆகிறது. இது எடிற்றிங் செய்யப்பட்டது என்றால் என்னை கைது செய்திருக்க வேண்டுமே? ஏன் இதுவரை கைது செய்யவில்லை? அந்த வீடியோவை தடயவியல் சோதனைக்கும் அனுப்ப வில்லை.

விசாரணை ஆணையக செயலாளர் கோமளா காணொளி தொடர்பாக பொய் தகவலை பரப்பி மக்களை திசை திருப்புகிறார் என்றார்.

அப்பலோ வைத்தியசாலையில் ஜெயலலிதா சிகிச்சை பெற்றபோது குளிர்பானம் குடிப்பது போன்ற வீடியோவை ஆர்.கே.நகர் தேர்தலின் போது டி.டி.வி.தினகரனின் ஆதரவாளரான வெற்றிவேல் வெளியிட்டுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்நிலையில் ஜெயலலிதா விசாரணை ஆணையகம் இது தொடர்பிலும் விசாரித்து வரும் நிலையில், வெற்றிவேல் மேற்படி தெரிவித்துள்ளார்.

# கருணாநிதி நலமாக உள்ளார் தொண்டர்களே தீக்குளிக்காதீர்

## ஸ்டாலின் அவசரக் கோரிக்கை

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்காக யாரும் தீக்குளிக்க வேண்டாம் என்றும், அவர் நலமாகவே உள்ளார் என்றும், அந்தக் கட்சியின் செயல் தலைவரும், கருணாநிதி மகனுமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நேற்று வியாழக்கிழமை ஆறாவது நாளாகவும் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நலம் தேறி வர வேண்டுமெனத் தொண்டர்கள் வைத்தியசாலையைச் சுற்றியுள்ளமை மற்றும் தீக்குளிக்க முற்படுகிறமை, எனப் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதால் ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறைந்த இரத்த அழுத்தம் காரணமாகக் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் காவேரி மருத்துவமனையில் கருணாநிதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மூச்சுத் திணறலால் கருணாநிதி பாதிக்கப்பட்டிருந்ததாகக் கடந்த செவ்வாய்க்கிழமை மருத்துவமனை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



மேலும், கல்லீரல் மற்றும் இரத்த அழுத்த சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், முதுமையைக் கருத்தில் கொண்டும், கருணாநிதி மருத்துவமனையிலேயே தொடர்ந்து சில நாட்கள் இருக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்தது.

இதையடுத்து, அவர் நேற்று ஆறாவது நாளாகம் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரின் உடல் நிலை சீராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை தி.மு.க தலைவர் கருணாநிதியின் உடல்நிலை தேறி வருவதாக அந்தக் கட்சியின் செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதனால் தி.மு.க தொண்டர்கள் எவரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை எனவும் ஸ்டாலின் கூறியுள்ளார்.

கருணாநிதிக்குத் தொடர்ந்து காவேரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாகவும் மு.க. ஸ்டாலின் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தற்போது கருணாநிதி முழுச் சுயநினைவுடன் இருப்பதாகவும், அவரின் உடல்நிலை இயல்பு நிலையை அடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதே நிலை தொடர்ந்தால் அவர் விரைவில் வீட்டிற்கு அழைத்து செல்லக் கூடிய நிலைமை இருப்பதாகவும் கூறினார்.

எனவே தனது தந்தைக்காக உயிரை மாய்த்துக்கொல்லும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் எனவும், அவர் தி.மு.க. தொண்டர்களைக் கேட்டுள்ளார். (ஐ)

# சூழலுக்கு பங்கமில்லாத எரிபொருள் அறிமுகம்!

புதுடில்லி, ஓக 03

சூழலை மாசுபடுத்தாத எரிபொருளொன்றை இந்தியாவின் மத்தியரைபூர் நகர அதிகாரிகள் அறிமுகப்படுத்தி யுள்ளார்கள்.

சடலங்களைத் தகனஞ்செய்ய மரக்குற்றிகளைப் பயன்படுத்துவதற்கு பதிலாக குறித்த எரிபொருள் குற்றியை உபயோகிக்கலாம். இவை காடழிப்பு, வளிமாசடைதல் என்பவற்றைத் தடுக்கும் வகையில் அமையுமெனவும் நேற்றுமுன் தினம் ரைபூர் நகர முதல்வர் பிரமோத் டுபே தெரிவித்துள்ளார்.

இந்தியா முழுவதும் ஒவ்வொரு வருடமும் 50 தொடக்கம் 60 மில்லியன் வரையான மரங்கள் சடலங்களை தகனஞ் செய்வதற்காக வெட்டப் படுகின்றன. மரக்குற்றிகளின் பாவனையை முழுதளவுகுறைப்பதன் மூலம் காடழிப்பைத் தடுத்துக் கொள்ள முடியும்.

ஆனால், இந்த குற்றிகளானது மாட்டுச் சாணத்தில் தயாரிக்கப்படு கின்றன. இவை கையாள்வதற்கு சுலபமானதுமாகும்.

அந்த வகையில் சூழலுக்கு பங்கமில்லாத இந்த எரிபொருளானது அதிகமாகத் தயாரிக்கப் படுகின்றது. ஒரு நாளைக்கு நான்கு சடலங்களைத்தகனஞ்செய்யுமளவுக்கு இதன் உற்பத்தி இடம் பெறுவதாகப் பிரமோத் டுபே குறிப்பிட்டார்.

# உள்ளாட்சித் தேர்தலை நடத்த அ.தி.மு.க. தயார்

## கூறுகிறார் கடம்பூர் ராஜு

சென்னை, ஓக 03

உள்ளாட்சி தேர்தலை எந்த நேரத்தில் நடத்துவதற்கும் அ.தி.மு.க. அரசு தயார் நிலையிலுள்ளதாக செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தவிடாமல் செயற்பட்டுவிட்டு, தற்போது அரசியல் காரணங்களுக்காக குற்றம்சாட்டி வருவதாகக் கூறினார்.

எதிர்க்கட்சியின் வேலை அரசை குற்றம் கூறுவதென்றும், அந்த வேளையில் எதிர்க்கட்சியாக இன்றி எதிரிகளாகச் செயற்படுவோர் பொய்யான அரசியல் காரணங்களை முன் வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# கருணாநிதி உடல் நலம் குறித்து கேரள முதல்வர் நேரில் விசாரிப்பு

சென்னை, ஓக 03

திமுக தலைவர் கருணாநிதியின் உடல் நலம் குறித்து விசாரிப்பதற்காக கேரள முதல்வர் பினராயி விஜயன் சென்னை வருகை தந்தார்.

இரத்த அழுத்தம் குறைந்ததன் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குப் பிறகு காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கருணாநிதிக்குத் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், திமுக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் சந்தித்து, கருணாநிதியின் உடல்நலம் குறித்து அனைத்து தரப்பினரும் விசாரித்து வருகின்றனர்.

கருணாநிதியின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வந்த தகவலை தொடர்ந்து புதன்கிழமை மருத்துவமனைக்கு வரும் தொண்டர்களின் எண்ணிக்கை குறைந்தது. அதைத் தொடர்ந்து, லஸ் செல்லும் சாலை இரு வழிச் சாலையாக மாற்றப்பட்டது.

இந்நிலையில், கருணாநிதியின் உடல்நிலை குறித்து விசாரிப்பதற்காக சென்னை வந்த கேரள முதல்வர் பினராயி விஜயன், காவேரி மருத்துவமனை சென்று தி.மு.க செயல்தலைவர் மு.க. ஸ்டாலினிடம் கருணாநிதி உடல் நலம் குறித்து கேட்டறிந்தார்.



பின்னர் பினராயி விஜயன் செய்தியாளர்களிடம் பேசுகையில், பிறவி போராளியான திமுக தலைவர் கருணாநிதி உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கருணாநிதி விரைவில் பூரண குணமடைய வாழ்த்துகிறேன் என தெரிவித்தார். (ஐ)

# தமிழ் படத்தை பார்த்து பாராட்டிய ஜனாதிபதி

புதுடில்லி, ஓக 03

நரிக்குறவர்களின் வாழ்க்கையை மையமாக வைத்து கொள்ளிடம் என்ற படத்தை இயக்கிய நேசம் முரளி. தற்போது பிளாட்பாரத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையை மையமாக கொண்டு கபிலவஸ்து என்ற படத்தை இயக்கி உள்ளார்.

இந்தப் படத்தை இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பார்த்து பாராட்டி உள்ளார்.

இது குறித்து நேசம் முரளி கூறியதாவது:–

கௌரவத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தவறான உறவில் பிறக்கும் குழந்தைகளைச் சில பெரிய மனிதர்கள் பிளாட்பாரத்தில் போட்டுவிட்டு செல்கின்றனர். ஜாதி, மதம், இனம் எது என்று தெரியாமல் வளரும் அவர்கள் நிலை எவ்வளவு பரிதாபமாக மாறுகிறது என்பதை இப்படம் சொல்கிறது.

இப்படத்தை இந்திய ஜனாதிபதி பார்ப்பதற்காக அனுப்பி வைத்தோம். ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஜனாதிபதி படம் பார்க்க விரும்புவதாக அழைப்பு வந்தது. கடந்த 27ஆம் திகதி மதியம் 12 மணியளவில் டில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து ஜனாதிபதிக்கு பிரத்தியேகக் காட்சி திரையிடப்பட்டது.

படத்தை பார்த்த ஜனாதிபதி, சாலையோர மக்களின் வாழ்கையை மிகவும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது இந்தப் படம். இந்திய சினிமாவில் இது ஒரு புதிய முயற்சி. சாலையோர மக்களின் வாழ்க்கை வளம்பெற உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.–என்றார்.

## கூரை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன. சுகாதார அதிகாரியின் நிர்வாகம் கூட மாகாணத்திற்கு வழங்கப்படவில்லை.

மாகாணப் பொது நிர்வாகம் கூட ஆளுநரின் நிறைவேற்று அதிகாரங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதிருந்த தவராசா வானம் ஏறி அவைத்தலைவர் ஆசியினால்வைகுண்டத்திலேயே இப்பொழுது காலம் கழிக்கின்றார் என்பதை மறந்து விட்டார்.

நண்பருக்கு தெரிந்தவை பற்றி அல்லது அவருக்கு வேண்டியவை பற்றி அவர் பேசுகிறார். அவை அவருக்குக் கிடைக்காததால் எம் மீது கோபம் கொள்கின்றார். முழு வட மாகாண நிர்வாகத்திலும் அவருக்கு நன்மை தரும் விடயங்களைத்தான் நாங்கள் இதுகாறும் கவனித்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார். அவை செய்யப்படாவிட்டால் எமது செயற்பாடு செயற்றிறம் அற்றது என்கிறார்.

தப்பித்தவறி அவர் முதலமைச்சராக வந்தால் (கடவுள் அதனைத் தடை செய்வாராக!) அவ்வாறான நடவடிக்கைகளில்தான் ஈடுபடுவார் என்று தெரிகின்றது. அபிவிருத்தித் திட்டங்களை நான்தான் இங்கு கொண்டு வந்துவிட்டேன் என்று மார்தட்டிக்கூறி அரியாசனத்தில் இருப்போரின் அடியை ஆசையுடன் பற்றிச் செயற்படுவார் போல் தெரிகின்றது. உரிமைகள் இல்லாமல் உதவியை நாடுவது எம் உருக்குலைவுக்கு வழிவகுக்கும்.

அவர் அடுத்த தேர்தலில் தமக்கு வழி அமைக்க என்னைச் சீண்டுகின்றார். முதலில் தனக்கு வாக்களிக்கப் போகும் மக்களிடம் சென்று அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றட்டும்; அவர்கள் நன்மதிப்பைப் பெறட்டும். என்னுடன் மோதி மக்களின் நன்மதிப்பைப் பெறலாம் என்று அவர் நினைத்தால் அது அவரின் பகல் கனவாகும்!

கூரை மேல் ஏறி குறை கூறி பிழை பிடிப்பவர் எப்பொழுதும் குதர்க்கமாகவே பேசுவார். நாம் எதுவும் செய்ய முடியாது. – என்று உள்ளது.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதியும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் இந்த நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தினால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்துடன், இந்த அலுவலகத்தினூடாக யாழ். மாவட்டம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களானமாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் அதிகாரிகள், அரச வங்கிகள் மற்றும் அரச அலுவலகங்களின் அதிகாரிகள் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர்.(ஐ-7)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்ணான்டோதெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடமிருந்து நான்கு மோட்டார் சைக்கிள்களையும் மீட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக நிறுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கையை உடன் எடுக்குமாறு கடற்றொழில், நீரியல்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதில் உரிய தீர்மானம் எடுக்கும் வரை மீனவர்களிடையே காணப்படும் சுருக்குவலை மீன்பிடி முறையைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு தகுந்த நடவடிக்கையை உடன் எடுக்குமாறு கடற்றொழில், நீரியல்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## இந்த ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவை வழங்காத நிலையே ஏற்படுமென வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் நடத்திய கலந்துரையாடலில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத்தீர்வு காணப்படவேண்டும். ஆகவேஅந்தத் தீர்வை அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்த ஆட்சியில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அவ்வாறு தீர்வு காணப்படாவிட்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் தமிழ் மக்கள் ஆதரவை வழங்க மாட்டார்கள். – என்றார். (ஐ-7)

## யாழ்.வந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்த பணகல உபதிஸ்ஸ தேரர் இந்து மதத் தலைவர்களையும், வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனையும் சந்தித்துப் பேசினார்.

நேற்றுக் காலை யாழ். வந்த பணகல உபதிஸ்ஸ தேரர் நேற்று மாலை 3.30 மணிக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் மற்றும் சின்மய மிசன் சுவாமிகள் ஆகியோரைச் சந்தித்து மத வேற்றுமைகளைக் களைவதன் ஊடாக இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பது தொடர்பில் பேசியுள்ளார்.

விரைவில் இந்து மத தலைவர்களையும், பௌத்த மதத்தலைவர்களையும் ஒன்றிணைத்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவது தொடர்பிலும் அவர் ஆராய்ந்துள்ளார்.

மாலை 4 மணிக்கு வட மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனைச் சந்தித்த உபதிஸ்ஸ தேரர் யாழ்.மாவட்டத்தில், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் மக்களுக்குள்ள தேவைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சிறுவர் பாடசாலை அமைப்புப் பணிகள் குறித்தும் அவர் ஆராய்ந்தார். (ஐ-7)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கட்டடத்தைக் கிளிநொச்சியில்அவர்திறந்துவைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி, அறிவியல் நகரில் காலை 10.45 மணிக்கு நடைபெற்றவுள்ளது. (ஐ)

## தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கவேண்டுமென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் வடக்கில் முன்னெடுக்கும் செயற்திட்டங்கள் மற்றும் புதிய கடன் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த அலுவலகத்தின் தலைவியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றும்போதே மாவை சேனாதிராசாமேற்கண்டவாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சினூடாகப் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிலும் தற்போது முன்னெடுக்கப்படவிருக்கும் கடன்திட்டங்கள் எமது மக்களுக்கு பல்வேறு நன்மைகளை அளிக்குமெனநாங்கள் நம்பிக்கை கொள்கின்றோம். ஆகவே இந்தக் கடன் திட்டம் முழுமையாக மக்களைச் சென்றடையக் கூடியதாகவும் அதனை மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உரிய வழிவகைகளை அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும்.

இந்த நாட்டில் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த 3 ஆண்டுகளாக இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஆனால் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கமுடியுமா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

இதேவேளை, அரசு இவ்வாறான சில உதவித் திட்டங்களை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு தீர்வை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்பதே எங்களதும் எமது மக்களதும் பிரதான கோரிக்கையாக உள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டியது அவசியம். அதற்கான முயற்சிகள் பல எடுக்கப்பட்டபோதும் அவை அனைத்தும் ஏதோ சில காரணங்களால் ஏதோ சில தரப்புக்களால் குழப்பப்பட்டும் முறியடிக்கப்பட்டுமே வந்திருக்கின்றன. குறிப்பாக இங்குள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா காலத்திலும் அத்தகையதொரு முயற்சி எடுக்கப்பட்டு இறுதி நேரத்தில் அதுவும் குழப்பியிருந்தது.

ஆகவே இன்றைக்கு பிரதான இரு கட்சிகளும் இணைந்து முன்னெடுத்து வரும் ஆட்சிக்குப் பல கட்சிகளும் ஆதரவை வழங்கியிருக்கும் நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குப் புதியதொரு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே இந்த முயற்சிக்கு சந்திரிகா முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். – என்றார். (ஐ-7)

## முல்லை மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 8 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மீன்பிடி அமைச்சர் தலைமையில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவில் சுருக்கு வலை மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய கடற்தொழிலாளர்கள் இடையே காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டத்தை முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில், நீரியல்வளத்திணைக்கள அலுவலக மண்டத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் மீன்பிடி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும், இதில் மீனவர் அமைப்புக்களைச் சார்ந்த 10 பிரதிநிதிகளைக் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணாடிகள் நொருக்கியமையோடு சுற்று வேலியையும் முற்றாக உடைத்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாகப் பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடித்தொழிலை உடனடியாக நிறுத்துமாறு கோரி உள்ளூர் மீனவர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு நேற்றுக் காலை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம் முன்னால் ஆரம்பமான இந்தப் பேரணி முல்லைத்தீவு பொதுச் சந்தை வழியாக நகரை அடைந்து அங்கிருந்து மாவட்ட கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களத்தைச் சென்றடைந்தது.

நீரியல்வளதிணைக்கத்துக்கு முன்பாக ஒன்று திரண்ட மக்கள், சட்டவிரோத மீன் பிடியைத் தடைசெய்யுமாறு கோரிக் குரல் எழுப்பினர்.

நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தம்மைச் சந்திக்க வேண்டும் என நீண்ட நேரமாகத் திணைக்களத்தின் முன்னால் ஆர்ப்பாட்டக்காரர்கள் காத்திருந்தனர்.

நீண்ட நேரமாகக் காத்திருந்தும் உதவிப் பணிப்பாளரோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த எவருமே தங்களை வந்து சந்திக்காமையினால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரின் தடைகளையும் மீறி வேலிகளை உடைத்து திணைக்களத்தினுள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் திணைக்கள ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கின; சுற்று வேலியும் முற்றாக உடைந்தது.

இதனைத் தொடர்ந்து அதிக எண்ணிக்கையான கலகம் அடக்கும் பொலிஸார் திணைக்களத்தைச்சுற்றி நிறுத்தப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஆகியோர் நீரியல் வள அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் திணைக்களத்தின் முன்னால் பந்தல் அமைத்து தொடர்ந்தும் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவாகவும், பிரதி அமைச்சர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாவாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## 2020ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் வடக்கில் முன்னெடுக்கும் செயற்திட்டங்கள் மற்றும் புதிய கடன்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அவர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அரசியல்வாதிகள், அரசஅதிகாரிகள், வங்கிஅதிகாரிகளை அவர் சந்தித்துப் பேசினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமானமாவைசேனாதிராசா, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சந்திரிகா அம்மையார் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவரிடம் நேரில் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றும்போதே சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது ஆட்சிக் காலத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காணும் நோக்கில் ஒரு திட்டத்தைகொண்டு வந்திருந்தேன். அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் என் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியிருந்தும் நான் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காணவேண்டுமென்பதற்காக நீண்டதொரு நடவடிக்கையை எடுத்திருந்தேன்.

அவ்வாறு எடுத்த முயற்சியின் பலனாக ஒரு தீர்வுத் திட்டத்தை நான் கொண்டு வந்ததபோதிலும் அதனைக் குழப்பவேண்டுமென்பதற்காக வெறும் ஏழு வாக்குகளால் அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு கட்சி கொண்டு வந்தால் மற்றக் கட்சி எதிர்க்கின்ற நிலையே இருந்தது. அதுவே என்னுடைய காலத்திலும் நடைபெற்றது.

அதனால் எனது செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியவில்லை. ஆனால் இன்று நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதாவது இந்த நாட்டின் இரு பிரதான தேசியக் கட்சிகளும் இணைந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றன.

அவ்வாறு இணைந்து முன்னெடுக்கப்பட்டு வரும் ஆட்சியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிலும் அந்த நடவடிக்கைகளுக்குத் தற்போது ஜே.வி.பியும் ஆதரவளித்துள்ளது.

ஆகையால் இதுவொரு நல்ல சந்தர்ப்பமாகவே காணப்படுகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்தியே அதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணமுடியும். – என்றார். (ஐ-7)

# மோசமான களத்தடுப்பால் இலங்கை அணி தோல்வி



இலங்கையின் அணியின் அசமந்தப் போக்கின் காரணமாகவும் மோசமான களத் தடுப்புக் காரணமாகவும் தென்னாபிரிக்க அணி இரண்டாவது ஒரு நாள் போட்டியில் 4 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டியின் இரண்டாவது போட்டி தம்புள்ளை ரங்கிரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பாக அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் 111 பந்துகளுக்கு 79 ஓட்டங்களையும் நிரோன் டிக்வெல்ல 78 பந்துகளுக்கு 69 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

245 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் டீகொக் மற்றும் அம்லா ஜோடி உறுதியான ஒரு அத்திபாரத்தை அணிக்காக இட்டது. அதனூடன் இலங்கை அணியின் மோசமான களத் தடுப்பும் இரண்டு பிடி நழுவல்களும் தென்னாபிரிக்க அணியின் ஓட்ட அதிகரிப்புக்கு மேலும் வலுச் சேர்த்தது.



ஒரு கட்டத்தில் 14 ஓவர்களை எதிர்கொண்ட இந்த ஜோடி 91 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டபோது அகில தனஞ்சயவின் பந்து வீச்சினால் ஹஸீம் அம்லா 43 பந்துகளுக்கு 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டபோது ஆட்டமிழந்து வெளியேற 14.2 ஓவரில் இவருக்கு பக்க பலமாக துடுப்பெடுத்தாடிய டீகொக் 43 பந்துகளை எதிர்கொண்டு அரை சதம் விளாச 15 ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 100 ஐ கடந்தது.

ஹஸீம் அம்லாவின் ஆட்டமிழப்பினையடுத்து களமிறங்கிய மார்க்ரம் வெகு நேரம் தாக்கு பிடிக்காமல் அகில தனஞ்சயவின் பந்து வீச்சில் மூன்று ஓட்டங்களை பெற்றிருந்தவேளை ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து களமிறங்கிய அணித் தலைவர் டூப்பிளஸ்ஸியும் டீகொக்குமாக இணைந்து 53 ஓட்டங்களை பெற்றுக் கொண்டிருந்த வேளை டீகொக் 87 ஓட்டங்களுடன் ராஜிதவின் பந்து வீச்சில் லக்மலிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இவரையடுத்து சிறப்பாக ஆடி வந்த டூப்பிளஸ்ஸி மூன்று ஆறு ஓட்டங்கள் மூன்று நான்கு ஓட்டங்கள் அடங்களாக 41 பந்துகளுக்கு 49 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை அகில தனஞ்சயவின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்து அரைசதம் அடிப்பதற்கான வாய்ப்பினை நழுவ விட்டார்.

அவரைத் தொடர்ந்து களம்புகுந்த மில்லருடம் மூன்று ஓட்டங்களுடன் சுரங்க லக்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் 33 ஆவது ஓவரின் போது தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை கடந்தது.

இறுதியாக இங்கிலாந்து அணி 42.5 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களை பெற்று இலங்கை அணி நிர்ணயித்த வெற்றி இலக்கினை கடந்தது.


இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில் அகில தனஞ்சய 60 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் சுரங்க லக்மால், கசூன் ராஜித மற்றும் திஸர பெரேரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள். போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டீகொக் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் தென்னாபிரிக்க அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இவ் இரு அணிகளுக்குமான மூன்றாவது போட்டி இன்று வெள்ளிக்கிழமை கண்டி பல்லேகல மைதானத்தில் காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)





# ஓய்வில் இருந்த முன்னணி வீரர்கள் பார்சிலோனா அணியில் இணைவு!

சர்வதேச சம்பியன்ஸ் கிண்ண உதைபந்துத் தொடரில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக பார்சிலோனா அணியில் இடம்பெற்றுள்ள முன்னணி வீரர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னணி உதைபந்து கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் 6 ஆவது சர்வதேச சம்பியன்ஸ் கிண்ண உதைபந்துத் தொடர், தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

கடந்த ஜுலை 20 ஆம் திகதி முதல் ஆம்பமான இந்தத் தொடர், எதிர்வரும் ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த தொடர், ஒன்பது நாடுகளில் 22 நகரங்களில் நடைபெறுகின்றது. இதில் 18 அணிகள் பங்கேற்கின்றன.

இந்நிலையில் இந்தத் தொடரில் இடம் பெற்றுள்ள முன்னணி உதைபந்து கழக அணியான ஸ்பெயினின் உதைபந்து அணி, அணியில் முன்னணி வீரர்கள் இல்லாததால் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

புள்ளிபட்டியலில் பின்தங்கியுள்ள நிலையில் உள்ள பார்சிலோனா அணியை, வலுப்பெறச் செய்வதற்காக உலகக்கிண்ண உதைபந்துத் தொடருக்குப் பின்னர் அணியில் இடம்பெறாத வீரர்களை, அணி நிர்வாகம் அழைத்துள்ளது.

இதற்கமைய ஆர்ஜென்ரீனா உதைபந்து அணியின் நட்சத்திர வீரரான லயனல் மெஸ்ஸி, ஸ்பெயினின் உதைபந்து அணியின் வீரர்களான ஜெரார்ட் பிக் , ஜோர்டி அல்பா , செர்ஜியோ புஸ்கெட்ஸ் ஆகியோருக்கு அணி நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

தற்போது நீண்ட நாட்கள் ஓய்வில் இருந்த இவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன. இதன் பின்னர் அவர்கள் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# தவறுகளால் தோற்றோம்

போட்டி முழுவதும் நாங்கள் நிறைய தவறுகளை இழைத்தோம் என தெரிவித்துள்ள நிரோசன் டிக்வெல்ல போட்டியில் வெல்லவேண்டும் என்றால் நாங்கள் பலதவறுகளை இழைக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி நான்கு விக் கெட்களால் தோல்வியடைந்தது.

இலங்கை அணியின் களத் தடுப்பு மிக மோசமாகக் காணப்பட்டது. தென் னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தின் ஆரம்பத்திலேயே இலங்கை இரண்டு வாய்ப்புகளை தவறவிட்டது. மேலும் களத் தடுப்பும் மோசமான தாகக் காணப்பட்டது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள நிரோசன் டிக்வெல்ல ஒரிரு தவறுகளை இழைத்தால் அதனை போட்டியின் போதே சரிசெய்து போட்டியில் வெல்லலாம் ஆனால் பல தவறுகளை இழைக்க முடியாது என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவிற்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தான் சிறப்பாக விளையாடியதற்கான காரணத்தையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவர் கூறுகையில் –

நான் பயிற்றுவிப் பாளர் சண்டிக ஹத் துருசிங்க மற்றும் துடுப்பாட்ட பயிற்று விப்பாளர் திலான் சமரவீரவுடன் இணைந்து எனது ஆட்ட முறையில் சில மாற்றங்களைச் செய்தேன். அதன் காரணமாக நான் கவலை யடைந்திருந்தேன்.

பின்னர் நான் எனது வழமையான பாணியிலேயே விளையாடத் தீர்மானித்தேன். இன்று அவ்வாறே விளையாடினேன்.

இரண்டு விக்கெட்களை இழந்த பின்னர் எதிர்மறையான எண்ணத்தில் சிக்கிக்கொண்டால் மேலும் விக்கெட்டுகளை இழக்கவேண்டியிருக்கும். நான் அதனை நினைக்கவில்லை. ஏனைய வீரர்களுடன் இணைந்து இணைப்பாட்டத்தை ஏற்படுத்துவது குறித்தே சிந்தித்தேன்.

மத்தியுஸ் ஆடுகளத்தில நுழைந்த பின்னர் எனக்கு நிறைய உதவினார். அவர் ஒரு மூத்த வீரர். அவர் எப்போதும் ஆலோசனை வழங்கிக் கொண்டிருப்பார் – என்றார்.

# யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்த்தா சபையை கடுமையாகச் சாடி பேராயர் நேற்று அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக.03

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவரையும் உபதலைவரையும் பதவி விலகக் கோரும் தர்மகர்த்தா சபையினரின் சமீபத்தய கடிதத்தின் ஊடாக, அவர்கள் கபடத்தனமானதொரு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி பிரதானமான பயனாளி என்னும் தகுதிநிலையிலிருந்து விலத்தப்பட தர்மகர்த்தா சபையினர் எடுத்த இந்த நடவடிக்கைக்காக தர்மகர்த்தாக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி நிதியத்தின் பெருமளவு பணத்தை தங்களது சட்டநிபுணர்களுக்குச் செலுத்துவதற்காக மோசடி செய்துள்ளார்கள்

– இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் பேராயருமான டானியல் தியாகராஜா.

யாழ்ப்பாணக் கல்லூரி மூடப்படும் நிலைவராமலிருக்க சட்டரீதியான நடவடிக்கைகள் உட்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையினர் தொடர்ச்சியாக மேற்கொள்வர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையினர் தமக்கு யாழ்ப்பாணக் கல்லூரி நிதியத்தின் தர்மகர்த்தா சபையினரால் சமீபத்தில் எழுதப்பட்ட கடிதம் குறித்து ஆழ்ந்த கரிசனையடைந்துள்ளார்கள்.

இந்த நிதியம் 140 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணக் கல்லூரியை மட்டுமே ஆதரிப்பதற்கென அமெரிக்கா நாட்டில் பொஸ்டன் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தர்மகர்த்தா சபையினரால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல நிபந்தனைகளுள் ஒன்றாக யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் தலைவர் மற்றும் உபதலைவர் ஆகியோர் பதவி விலகவேண்டும் எனும் நிபந்தனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இல்லையேல் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு நிதி வழங்கப்படுதல் நிறுத்தப்படும் எனும் அச்சுறுத்தலும் எழுந்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் யாப்பிற்கமைய தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பேராயர் அதி வண. கலாநிதி டானியல் தியாகராஜா தமது பதவிவழியாக தலைவராகப் பணியாற்றுகின்றார்.

நாட்டிலுள்ள பல முன்னணி பாடசாலைகளில் அவர்களது ஆளுநர் சபையில் இவ்வகையான ஒழுங்கு உள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் உபதலைவர் செல்வி வியுலா அருளானந்தம் ஒரு மூத்த சட்டத்தரணியும், இலங்கைத் திருச்சபையின் (அங்கிலிக்கன் திருச்சபை) உறுப்பினரும், இந்த சந்தர்ப்ப சூழ் நிலையில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபைக்கு சட்ட ஆலோசனை வழங்கும் முக்கியமான ஒரு நபருமாவர்.

இந்த நிபந்தனை, தர்மகர்த்தாக்களான அவர்கள் சட்டம் மற்றும் அறஞ்சார்ந்ததுமான தங்களது கடமைகளினின்று நெறிபிறழ்ந்து வந்த பல தொடர்ச்சியான செயற்பாடுகளில் சமீபத்திய ஓர் சம்பவமாகும்.

தர்மகர்த்தாக்கள் பல தடவைகள் நம்பிக்கை சொத்தாவணத்தை மாற்றியமைத்துள்ளனர்.

இப்பேர்ப்பட்ட மாற்றங்கள் அனைத்துமே யாழ்ப்பாணக் கல்லூரியுடனோ அல்லது அதனது ஆளுநர் சபையுடனோ எந்தவிதமான ஆலோசனையுமின்றி தன்னிச்சையாகச் செய்யப்பட்டவையாகும்.

அதுமட்டுமல்ல, ஆதரவளிக்கப்படும் நிறுவனம் அல்லது பிரதானமான பயனாளி எனும் யாழ்ப்பாணக் கல்லூரியின் தகுதிநிலையை மாற்றவும் தர்மகர்த்தாக்கள் முயன்றுள்ளார்கள்.

1877ம் ஆண்டு உருவாக்கப்பட்ட நம்பிக்கை சொத்தாவணம் கூறுவதாவது:–

*“இந்த நிதியமானது யாழ்ப்பாணக் கல்லூரியை ஆதரிப்பதற்காக நிதியைப் பெறவும், வைத்திருக்கவும், நிருவகிக்கவும் ஏற்படுத்தப்பட்டது.”*

யாழ்ப்பாணக் கல்லூரி பிரதானமான பயனாளி என்னும் தகுதிநிலையிலிருந்து விலத்தப்பட தருமகர்த்தா சபையினர் எடுத்த இந்த நடவடிக்கைக்காக தர்மகர்த்தாக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி நிதியத்தின் பெருமளவு பணத்தை தங்களது சட்டநிபுணர்களுக்குச் செலுத்துவதற்காக மோசடி செய்துள்ளார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்கப்படும் நிதியை 20 சதவீதம் குறைப்பதாகவும், காரணமில்லாததும் தேவையற்றதுமான ஆட்சியமைப்பு மாற்றங்களை திணிக்கின்றதுமான தங்களது முடிவை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபைக்கு தர்மகர்த்தாக்கள் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அறிவித்தார்கள்.

வன்மையானதும், சட்டபூர்வமற்றதுமான இந்த நிதிக் குறைப்பு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பலத்த சிரமத்தையும், கல்லூரியினது கல்விசார் நடவடிக்கைக்கு அதிக பாதிப்பையும் ஏற்படுத்தியது.

இருப்பினும், இந்த விடயங்களெல்லாவற்றையும் கல்லூரியின் நலன்கருதி சமாதானமான முறையில் தீர்த்துவைப்பதற்காக யாழ்ப்பாணக் கல்லூரியினது ஆளுநர் சபையும், கல்லூரியின் அதிபரும் முயற்சியெடுத்து தர்மகர்த்தாக்களின் பரிந்துரைகளை நிறைவு செய்தனர்.

இருந்தபோதிலும், தர்மகர்த்தா சபையினர் கபடத்தனமானதொரு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பது அவர்களது சமீபத்தய கடிதத்தில் புலனாகிறது.

சுயநலன் கருதும் ஒருசிலரது நடவடிக்கைகளினால் பேர்பெற்று விளங்கும் இந்தப் பாடசாலை பாதிக்கப்பட்டுள்ளமை மிகுந்த மனவருத்தத்தையும் கவலையையும் ஏற்படுத்தும் ஒன்றாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி மூடப்படும் நிலைவராமலிருக்க சட்டரீதியானநடவடிக்கைகள் உள்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையினர் தொடர்ச்சியாக மேற்கொள்வர். – என்றுள்ளது. (ஐ)

# மாத்தளனிலும் நேற்று மீனவர்கள் போராட்டம்



முல்லைத்தீவு, ஓக 03

முல்லைத்தீவு மாத்தளன் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவ அமைப்புக்கள் ஒன்றிணைந்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தன.

மாத்தளன் சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன்போது, ‘தடைசெய்யப்பட்ட கடற்தொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்துங்கள்’, ‘சட்டரீதியான அனுமதிக்கப்பட்ட தொழில்களுக்கு ஏற்படும் இடையூறுகளை நீக்குக’, ‘மாவட்ட கடற்தொழில் அமைப்பு தலைவர் தன்னிச்சையான செயற்பாடுகளை நிறுத்திப் பதவி விலகவேண்டும்’ – என்பன போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ஐ)

# வடக்கு விகாரைகளில் தமிழர்கள் கரிசனை காட்டத் தேவையில்லை

## கூறுகிறார் உபதிஸ்ஸ தேரர்

யாழ்ப்பாணம், ஓக.03

வடக்கில் புதிதாக அதிகளவில் அமைக்கப்படும் புத்த விகாரைகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் அதிகம் கரிசனை கொள்ளத் தேவையில்லை என பணகல உபதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் அதிகரிக்கும் விகாரைகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் அதிக கரிசனை கொள்ளத் தேவையில்லை. இங்கு இந்து மக்களே அதிகமாகவுள்ளனர். அதில் கிருஷ்ணரின் ஏழாவது அவதாரமாகப் புத்தர் உள்ளார்.

புத்தரின் தாய், தந்தை, உறவினர்கள் அனைவரும் இந்து மதத்தை சேர்ந்தவர்கள். ஆகவே இங்கே புத்த விகாரைகள் அமைக்கப்படுவது தொடர்பாகப் பெரிதாகக் கரிசனைகொள்ளத் தேவையில்லை. – என்றார். (ஐ–7)

# நல்லாட்சிக்கு எதிராக வீதியில் இறங்கிய கூட்டு எதிரணியினர்

கொழும்பு, ஓக.03

கூட்டு எதிரணியின் ஆர்ப்பாட்டம் காரணமாகக் கொழும்பு நகர மண்டபப் பகுதியில் நேற்றுப் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

‘நாட்டை அழிக்கும், காட்டிக்கொடுக்கும் திறமையற்ற துரோகத்தனமான அரசை வெளியேற்றுவோம்’ எனும் தொனிப்பொருளில் கூட்டு எதிரணியினர் அரசுக்கு எதிராக நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லிப்டன் சுற்றுவட்டாரத்தில் ஆரம்பித்த கூட்டு எதிரணியின் ஜனபல சேனா எதிர்ப்பு பேரணி விகாரமகாதேவி பூங்காவை வந்தடைந்தது.

விகாரமகாதேவி பூங்காவில் கூட்டம் இடம்பெற்றது. (ஐ)



**நேற்று யாழ்ப்பாணம் வந்த வண.பணகல உபதிஸ்ஸ தேரர் நேற்று மாலை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசிய போது எடுக்கப்பட்ட படம்.**

SR city campus
in Jaffna Town
Do you think , ENGLISH
barrires for your professional carrier ?
Yes, you are right!
We have 7 different
Diplomas in English!
for Working crowed
Chose ones for your Fits
& improve your skill
NOW, we are intaking & working for
you in every Evening
Session time 5.30 - 6.45 pm - 7.00 - 8.15 pm
(Week and week Ends classes)
Seats are limited (10 )
Fees :Economic rate with installment basics
Hot line - 077 00515359

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.